COUNTRY HERALD.

கிராம தூதன்.

கௌரவ பத்திராதிபர்:

இரா. ந. நல்லகுற்றலம் பிள்ளை, [illegible]

1942 மார்ச்

மலர்-௪. இதழ்-௩

வாழ்க்கை முறை

1. நாம் பிறர் ஆக்கத்துக்குத் துணையாகவும் வாழவேண்டும்; அது முடியாது போயினும், பிறர் கேடு சூழாதேனும் வாழவேண்டும். பிறர்க்கின்னா நாம் முற்பகலில் நினைக்க, நமக்கின்னா பிற்பகலிலேயே திட்டமாக விளைகிறது. ஆதலால், பிறரைக் கெடுத்து வாழ நாம் நினைத்தலுங்கூடாது.

நம் பெற்றோர்கள் நம்மை வளர்த்துவிட்டபடி, நாமும் இவ்வுலக வளர்ச்சிக்காக நம் மக்களை வளர்த்துவிட வேண்டும். நாம் பிறந்த இவ்வுலகை, நாம் பிறந்த காலத்தினும் செம்மையுறச் செய்திடவும் வேண்டும்.

நாம் நம் குடும்பத்தினருக்குக் கைம்மாறு கருதாதும் உதவிவருவதுபோல, இவ்வுலகமாம் பெருங் குடும்பத்தினருக்கும் நாம் உதவி வரும் அளவிற்கே, இவ்வுலகம் நாம் வாழ்வதற்கேற்ற இடமாகும். பிறருக் குதவியில்லா நாட்டிலும் கொடும்புலி வாழுங் காடும் நன்றேயாகும்.

இரா. ந. நல்லகுற்றலம் பிள்ளை.

[illegible] க்கு ஏழை [illegible] இனி, [illegible] த்தாக [illegible] படி ஒழு [illegible] மக்களும் [illegible] ம்; தவறி [illegible] திண்ணம்.

[illegible] நத்திரநாத் தாக்கூர்.

கட
731 m 21/95 n 3957
N42.4.3
207595



சுழன்றும், ஏர்ப்பின்னது உலகம்—திருவள்ளுவர்.

விசேஷக் கட்டுரைகள்,

1. கிராம முன்னேற்றம்
2. உணவுப் பொருள் விளைவை அதிகப்படுத்துவதெப்படி?
3. கைத்தறி மாகாணக் கூட்டுறவுச் சங்க அறிக்கை
4. குழந்தை
5. கிராமச் சீரமைப்பு
6. பம்பாய் கைத்தறி நெசவறிக்கை

[illegible]

பிரசுரகர்த்தர்:

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	கடவுள் வணக்கம் : பிரார்த்தனை	65
2.	பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்	66
3.	கிராம முன்னேற்றம்	67
4.	நம் மாகாணத்தில் உணவுப் பொருள் விளைவை அதிகப்படுத்துவதெப்படி?... ...	69
5.	சென்னைக் கைத்தறி நெசவாளர் மாகாணக் கூட்டுறவுச் சங்க அறிக்கை 1940-41	72
6.	குழந்தை	76
7.	பம்பாய் கைத்தறி நெசவறிக்கை, 1932	79
8.	அ. குழந்தையைப் பேணி வளர்க்கும் முறை	83
	ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள் ...	84
9.	கிராமச் சீரமைப்பு	85
10.	ஆப்பிரிக்க அதிகாரியின் தீர்ப்பு	90
11.	செய்தித் திரட்டு:	
	அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்	91
	ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள்	94
	இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்	94
	ஈ. கூட்டச் செய்திகள் : தீர்ப்புக்கள்	95
12.	அறிவுரைத் திரட்டு:	
	அ. சிறந்த வாசகங்கள், செய்யுள்கள், அறவுரைகள், பழமொழிகள்	95

புத்தகங்கள், பத்திரிகைகள், அறிக்கைகள் வரவு.

கீழே காணும் பிரசுரங்களைப் பெற்றிருக்கிறோம்; அவற்றை உதவியவர்களுக்கு நம் நன்றியையும் செலுத்திக்கொள்ளுகிறோம்.

1. Indian Information. Nos. 87-88.
2. Bombay Information. Vol. iii. Nos. 4- 6.
3. Mysore Information. Vol. iv No. 12.
   Vol. v. No. 1.
4. Hyderabad Information. Vol. ii. Nos. 4-5.
5. ,, Press Notes, Communiques etc.
6. Madras Press Notes, Nos. 17-4-4
7. ,, Press Communiques. No. 9-15
8. Director of Agriculture Press Notes.
9. கூட்டுறவு மலர் 13. இதழ்கள் 15-16.
10. பாலர் கல்வி. தொகுதி 6. பகுதிகள் 11.
    செங்குந்த மித்திரன் மலர் 1 இதழ் 11.
    1 இதழ் 1.
11. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 19. பரல் 10.
12. நல்வழி மலர் 31. இதழ் 2.
13. வர்த்தக ஊழியன். எண் 115
14. மிராசுதார் தொகுதி 8. பகுதி 5.
15. போதன முறை கொத்து 32. எண் 8.
16. யுத்தப்படங்கள் எண் 11.
17. ஞானசம்பந்தம் தொகுதி 1. பகுதி 3.
18. தேவி, தொகுதி 1. பகுதி 4.
19. Madras Handloom weavers Provincial Co-operative Society Sixth Annual Report 1940-41.
20. School Broadcasts. Jan-March Station Directors. Madras, Bombay and Delhi.
21. Report on the working of Co-operative, Societies in the Madras Presidency. The Superintendant Government Press, Madras.
22. The Broom Rap parasite of Tobacco, Director of Agriculture, Madras.

THE COUNTRY HERALD

கிராம தூதன்

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்."

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

மலர்: ச	1942, மார்ச்சு—விசு, பங்குனி	இதழ்: ௩

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!

—திருவாசகம்.

கோ(த்)தும்பீ! தினையத்தனை உள்ளது ஓர் பூவினில் தேன் உண்ணாது (ஏ), நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்து எலும்பு உள்நெக ஆனந்த(த்) தேன் சொரியும் குனிப்பு உடையானுக்கு(ஏ) சென்று ஊதாய்.

விவசாய மகிமை

"ஆதிசேடன் பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிறான்" என்பது புராண வரலாறு. ஆனால் உள்ளபடி பூமியையும் பூமியிலுள்ள எல்லாச் சீவராசிகளையும் தாங்கிக் காப்பாற்றிக்கொண்டிருப்பவர்கள் நிலம் உழுது, எருவிட்டு, வித்து நட்டு, நீர் பாய்ச்சிக் களையெடுத்து, இரவு பகலாய்க் காவல் காத்து, நல்ல விளைவு கண்டு உதவி வருகிற விவசாயிகளேயாவார்கள்.

—ஓர் கிராமவாசி.

2. பொன்னுரைகள் : பொறுக்குமணிகள்

I. தண்டா மரையின் உடன் பிறந்தும்,
தண்தேன் நுகரா மண்டுகேம்
வண்டோ, கானத் திடையிருந்தும்
வந்தே, கமல மது உண்ணும்
பண்டே பழகி யிருந்தாலும்,
அறியார் புல்லோர் நல்லோரை ;
கண்டே களித்தங் குறவாடித்
தம்மிற் கலப்பார் கற்றோரே.

—விவேகசிந்தாமணி.

II. 1. எந்த மனிதன் தன்னைப் பற்றிப் பெரிதாக நினைத்துக்கொள்ளாமல், தன்னுடைய செல்வத்தையும் செல்வாக்கையும் சரீரத்தையும் வாழ்க்கையையும் அநித்திய மெனக் கண்டு, எந்த நேரத்திலும் எந்த நிலைமையிலும் நிதானமும் உறுதியும் உடையவனாய், தன்னை ஒரு சாமான்யனாகவே நினைத்து நினைத்துப் பழகி, காமம் உலோபம் வஞ்சனை சூது கள்ளம் கபடம் பொய் புரட்டு முதலிய தீவினைகளை மறந்து சத்திய சீலனாய், தயை தாட்சண்ய முடையவனாய், ஈகையுடையவனாய், இரக்க முடையவனாய் ஆனால் தைரியமும் வீரமும் உடையவனாய், வாழ்கின்றானோ அல்லது வாழ முயற்சிக்கின்றானோ அவனே மனிதன்.

2. ஏழையாயினும் சரி, பணக்காரனாயினும் சரி, சொல்லுறுதியும் நிதானமும் வேண்டும்; ஏழை மக்களைப் பார்க்கிலும் பணக்காரனுக்குச் சொல்லுறுதியும் நிதானமும் அவசியம் வேண்டும்; சொல்லுறுதியும் நிதானமுமில்லாதவனுடைய செல்வத்துக்கு ஒரு பெருமையும் இல்லை. சொல்லுறுதியும் நிதானமுமில்லாத மனிதன் மனிதனுமல்ல !

3. அதிகாரிகள் உண்மையிற் பொது சன ஊழியர்கள். அக்கிரமஞ் செய்வோருக்குத் தான் அவர்கள் அதிகாரிகள்; மற்றவர்கட்கு, அவர்கள் உதவி செய்யவேண்டிய ஊழியர்கள். சுயேச்சையும் சுதந்தரமும் உள்ள நாம் அடிமைப் புத்தியை ஒழித்துவிட்டு மனிதத் தன்மையை யடைய வேண்டாமா ?

(இளைஞருக்கு ஆலோசனை.)

—மு. சின்னையா செட்டியார்.

III. அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருந்தமிழர் வாழ்வினுக்கே அழகுசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தமிழின் அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேல்நிலைமேல் தூயதமிழ்ச் சிறப்பே
தழைத்தோங்கக் கலைச்செல்வம் சேர்ந்திடவே வேண்டும்
தப்பாது நன்னெறியில் அப்பணியை ஆற்றித்
தமிழ்நாட்டில் சிறந்தோங்கும் நிலைமையும் வேண்டுவனே.

— செந்தமிழ்ச் செல்வி.

3. தலையங்கம் :

கிராம முன்னேற்றம்

நாம் கடைசியாகக் கிராம வேலையைப்பற்றி எழுதினோம். அதன் பின் சில வேலைகள் நடந்துவரும் இரண்டு கிராமங்களைப் போய்ப் பார்த்து வந்தோம். அந்தக் கிராமங்களிலும் மற்றொரு கிராமத்திலும், கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் சிலர் கிராமவேலைகள் செய்து வருகின்றனர். அவற்றை நிரந்தரமாகச் செய்துவர ஒரு கிராம வழிகாட்டியுமிருக்கிறார். அவற்றிற்கெனத் தனிநிதியும் திட்டமும் இருந்து வருகின்றன; வெளி உதவியையும் அவற்றிற்காக அந்தக் கல்லூரி பெற்றுவருகிறது. நாம் பார்த்த கிராமங்களில், ஒன்றில் ஒரு இரவுப் பள்ளிக்கூடமும் அதற்கென ஒரு தனி ஆசிரியருமிருக்கிறார். இரண்டு கிராமங்களிலும் வாசகசாலைகளிருக்கின்றன. மற்றொரு கிராமத்தில் ஒரு பகற் பள்ளிக்கூடமும் நடந்து வருகிறது. இரவுப் பள்ளிக்கூடம் நடக்கும் கிராமத்தில் கிராமத்தார் இலவசமாக உழைக்க, கல்லூரி நிதியிலிருந்து ஒரு கிணறும் வெட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தகரக் கக்கூசும் அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. மற்றொரு கிராமத்தில் முனிசிபல் குப்பையையும் நரகலையும் இந்தூர் முறைப்படி கலந்து உரமாக்கிவர உதவியிருக்கிறது.

வாசகசாலைகளுக்குக் கிராமதூதன் பத்திரிகையும் போகிறது. ஆனால், அதனையும் மற்றப் பத்திரிகைகளைப் போலவே மேலளந்தவாரியாகப் படித்துவருவதாகத் தெரிகிறோம். அதனை ஊன்றிப் படிக்க வேண்டுமென்றேனும் அப்படிப் படித்தவற்றைப் பின்னும் சிந்தித்துப் பார்த்து அவற்றில் கையாளக் கூடியவற்றை அவர்கள் கூடியவரை கையாண்டுவர வேண்டுமென்றேனும் தெரிந்ததாக இல்லை. மாணவர்கள் போய்த் தெருவைக் கூட்டுவதும் தொட்டிகள் பதிப்பதுமாகச் செய்கிற வேலைகளோடு, கிராமத்தார்கள் கலந்து கொள்ளுவதாகவும் இல்லை. மாணவர்களும் ஆசிரியர்களும் சென்ற சில வருடங்களாகத் தொடர்ந்து வேலை செய்து வந்தும் அம்மாதிரி வேலைகளைத் தாமாகவே செய்து வரவேண்டுமென்ற அக்கறை இரண்டொருவரைத் தவிர மற்றவர்களுக்கு ஏற்பட்டதாகவும் இல்லை. கக்கூசெடுக்க ஆளுள்ள இடங்களிலும் அதனைச் சுற்றியே ஆபாசம் அதிகமாக இருந்துவரும் நம் நாட்டில் ஆபாசத்தை அப்புறப்படுத்த ஆளுமில்லாத நிலைமையில் கக்கூசு அமைத்திருக்கவே வேண்டாம்.

“கிராம முன்னேற்ற வேலைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஈடுபடுவதாக இருந்தால் தான், அவற்றை விரைவாகச் செய்து முடிக்கக்கூடும். மூன்று மாதத்திற்குக் குறையாமல் ஒரு வருடம்வரை அப்படி மாணவர்கள் வேலை செய்யவேண்டுமெனக் கட்டாயமுமிருக்கவேண்டும்” என்று பேசுகின்றனர். அப்படிப் பேசுகிறவர்கள் தான் கிராமங்களின் நிலைமை தெரியாது பேசுகிறார்களா? இந்தக் கிராமங்கள்தான் அவர்களுடைய வேலைகளைத் தயர்ந்து தாமாகவும் செய்துவராதிருக்கின்றனவா? என்பதை நாம் தெரியவேண்டும்.

பொது அறிவைக் கிராமங்களில் மற்றவர்கள்போல மாணவர்களும் ஆசிரியர்களும் பரப்பக்கூடும்; மற்றவர்களைக் காட்டிலுங்கூட, அந்த வேலைகள் செய்வதற்கு அவர்களுக்கு அதிக சௌகரியமும் சாவகாசமுமுண்டு. என்றாலும், வயிற்றுக்குணவில்லாத பொழுது ஆவலோடு செவிக் குணவைத் தேடுகிறகாலம் இதுவல்ல. பட்டினக்கரைகளில் அரை குறையாகப் படித்து நிறுத்தியவர்களுக்குப் பிரசங்கங்கள் செய்யக் (Extension lectures) கூடுமேயன்றி, கிராமச் சீரமைப்பு வேலைகளில் முதியோருக்கு எழுதப்படிக்கக் கற்பிப்பதற்குங்கூட அவர்கள் அவ்வளவாக உதவக்கூடியதில்லை.

ஆசிரியர்கள் மாணவர்கள் இவர்களுடைய பயிற்சியும் பழக்கமும் போக்கும் ஒரு விதம். கிராமவாசிகளின் பழக்கமும் போக்கும் அதற்கு நேர் மாறானவை. கிராமவாசிகளின் வரவு அதிகமாகாமல் குறைந்தும் செலவும் கடனும் வளர்ந்தும் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கும் நிலைமையில், அந்தக் கவலையே இல்லாத மாணவர்களும் ஆசிரியர்களும் அவர்களோடு சராங்கமாகக் கலந்து வரக்கூடியதில்லை. ஏகதேசம் கலப்பதினாலும் அதிகப் பயனிருக்க முடியாது.

குருடனுக்கு வேண்டியது கண் என்றாற் போல, கிராமவாசிகளுக்கு முக்கியமாக அவர்களுடைய வறுமைப் பிணி கடன் தொல்லை ஒழிய வேண்டும். அவர்களுடைய கடன் தலைக்கேறி, கை தொங்கித்திருந்தாலும், அதனை வெளியே சொல்லுவதில்லை; சொல்லிப் பிரயோசனமில்லை யென்றும் நினைக்கிறார்கள். அவர்கள் தங்கள் கைப் பக்குவமாகச் செய்து வந்த முறைகளினாலும் கடன் பிணி குணமான பாடில்லை. இந்த நிலைமையிலேயே கிராமவாசிகளில் அனேகரிருக்கின்றனர். இவர்களுக்கு மாணவர்களின் பிரசங்கங்கள் எப்படியேனும் இவர்கள் தமாசுக்காகக் கேட்க வந்தாலும், வலது காது வழியாக வாங்கி இடது காது வழியாக விட்டுவிடுவார்கள்.

கற்றாரைக் கற்றாரே காமுறுவரென்றாற் போல ஓர் உழவர் தம்மைப்போல நெற்றி வெயர்வை நிலத்தில்விழப் பாடுபடும் மற்றோர் உழவரோடேயே அளவளாவுதல் கூடும். அதுவும், தம்மைப்போல உழைத்தோ அதற்கும் குறைந்த சிரமத்திலோ மிகுந்த விளைவையும் மிச்சத்தையும் காண்கிறாரென்றால், அவரைக் காமுறுதலுங் கூடும். அவர் தம் வரவைப் பெருக்கவும் தம் கடன் தொல்லையை ஒழிக்கவும் கூடுமென்றால், அவர் சொன்னபடி கேட்கவும் கூடும். அத்தகையார் கிராமங்களிலிருந்து தங்கள் நிலங்களில் விளைவைப் பெருக்கி வருதே 'ாடு பிறருக்கும் நல்ல விதைகள் கொடுத்தும் பிறரைத் திருத்தமான முறைகளைக் கையாளத் தூண்டியும் அவர்கள் மிச்சத்தையும் பெருக்கிக் கடன் தொல்லையை ஒழித்து வரக் கூடுமென்றால், அவ்வளவில் கிராமவேலைகளை ஆரம்பிக்கவும் தொடர்ந்து முறையாகச் செய்து வரவும் தோதாக இருக்கும்.

கிராமவாசிகளின் முக்கியத் தொழிலாகிய (Main Industry) உழவின் வரவைப் பெருக்காமல், உபதொழில்களைச் (Subsidiary Industries) செய்யத் தூண்டவும் அவற்றின் மூலம் வரவைப் பெருக்கவும் முயற்சிப்பது கொஞ்சமும் பயன்படாது. அவற்றையும் செய்யாமல், எழுத்தறியாமையைப் போக்கவும் சுகாதார சௌகரியங்கள் அமைக்கவும் செய்கிற முயற்சிகளெல்லாம் கன்றுக்குத் தூரி லூற்றி வேருக்குச் செலுத்தும் தண்ணீர் போலுதவுவதற்கில்லாமல் முற்றிய மரத்தின் உச்சியிலூற்றிப் பலவாறாகச் சிதறிப் போகும் தண்ணீராகவே முடியும்.

நாம் பார்த்த கிராமங்கள் இரண்டும் அடுத்தடுத்திருக்கின்றன. அவற்றில் ஒன்றில் சாராயக்கடையிருந்து வருகிறது; அங்கே, சமீபத்தில் காப்பிக்கிளப்பும் வந்திருக்கிறது. சாராயக் கடையே பெரும் பீத்தல்; மற்றச் சிறு பீத்தல்களையும் பெரிதாக்கிக் கொண்டேயிருக்கும் பீத்தல். அப்படிப் பீத்தல்களைப் பெரிதாக்கிக் கொண்டிருக்கும் வேலை அரவமில்லாமல் ஓயாதும் நடந்து கொண்டிருக்க, கிராமச் சீரமைப்பு வேலைகள் எப்படிச் செவ்வனே நடைபெறும்? நீரிழிவுக்காரனுக்கு வந்திருக்கும் புண்களை—கிராமவாசிகளின் கடன் தொல்லையை— அவனுடம்பில் குருதியிலிருக்கும் சருக்கரையை—(சாராயமும் சருக்கரைதான்) ஒழிக்காமல் குணப்படுத்துவதெப்படி?

விவசாய வருட நிகர வரவு ஒரு குடும்பத்திற்கு ரூ.180 ஆக இருக்குமென்றால், அதனைக் கால்வாசி கூட்டினாலும் ரூ. 45 அதிகமாகும். பாற் பசுவோ எருமையோ விவசாய வேலைகளுக்குப் பாதகமில்லாமல் வருடம் பூராவும் வளர்க்கலாம். அதனால் வருடத்திற்கு ரூ. 50 மிச்சமுங் காணலாம். விவசாயத்தை ஒட்டிய

வண்டியடிப்பு, கயிறு தும்பு திரித்தல், வடம் முறுக்குதல், கூடை முடைதல், கிணறு வெட்டு, குளம் மராமத்து முதலிய வேலைகளை விவசாய வேலைகளில்லாத காலத்தில் செய்து வருடத்தில் ரூ. 30—40-ம் சம்பாதிக்கலாம். மாட்டிற்கு வேண்டிய தீவனப்பயிர்களும் சாகுபடி செய்து அவற்றைக் காப்பாற்றி வரவேண்டும். பொலிகாளை எருமைக்கடாவைக்கொண்டு அவற்றை விருத்தி செய்தும் வரவேண்டும்.

வீட்டுக்கழிவு தண்ணீர்—சட்டி பானை கழுவுகிற தண்ணீரோ—நாறுவதேயில்லை. அதனோடு சாணி, கோமயம் சேரவிட்டாலும் நாறும்; நெய், பால், தயிர், மோர், எண்ணெய் சேர்ந்தாலும் நாறும். சாணி, கோமயத்தைக் குப்பையில் சேர்த்துவரலாம். முற்றத்திலோ கொல்லையிலோ பக்கத்திலோ காய்கறிச்செடி கொடிகள் வைத்துக் கழிவு தண்ணீரை அவற்றிற்கு விட்டு அவற்றின் பலனையும் அனுபவித்து வரலாம்; தெருவிலேனும் மரங்கள் வைத்து அவற்றிற்கு விட்டுவரலாம். குளம் குட்டை ஓடைக்கரைகளிலும் குழைக்காக விறகுக்காக மரங்கள் வைத்துண்டுபண்ணலாம். அடுப்பெரிக்க விறகு சௌக்கியமாகக் கிடைத்தால், சாணியை அப்படியே குப்பையில் சேர்த்துவரவும் முடியும். இப்படியாகப் பல வகையிலும் விருத்தியாகி வரலாம்.

கிராம முன்னேற்றத்தில் கிராம வாசிகளின் நல் வாழ்க்கையில், அரசாங்கத்துக்கும் கிராம வாசிகளுக்குமே அக்கறையிருக்கவேண்டும். அரசாங்க அதிகாரிகளும் சமூக ஊழியர்களும் கிராமவாசிகளும் கலந்து, பல துறைகளிலும் ஒருங்கே முன்னேறுவதற்கான திட்டமொன்றை வகுக்கவேண்டும்; அதனைச் சரியாகத் தொடர்ந்தும் நடத்திவரவேண்டும். அப்பொழுதுதான், நாம் கிராமங்கள் முன்னேறிவரக் காணமுடியும்; மற்றப்படி செய்யப்படும் வேலைகளெல்லாம் கடலிற் கரைத்த காயமாகவே முடியும்.

---

4. வேளாண்மை :

நம் மாகாணத்தில் உணவுப் பொருள் விளைவை அதிகப் படுத்துவதெப்படி?

நம் மாகாணத்தில் இரண்டே முக்கால் கோடி ஏக்கர் நிலத்தில் அதாவது மொத்தப் பரப்பில் நாலில் மூன்று பாகம் உணவுப் பொருள்கள் விளைகின்றன. அவற்றில் மூன்றிலொரு பாகம் நெல் சாகுபடியாகிறது; மற்றப் பாகத்தில் சோளம், கேப்பை, சாமை, வரகு, கடலை, பாசிப்பயறு, காணம், உழுந்து முதலியன சாகுபடியாகின்றன. அப்படியிருந்தும், வருடந்தோறும் பர்மாவிலும் பிற மாகாணங்களிலும் இருந்து எழுநூறாயிரம் தன் (Ton) அரிசியும், மற்றும்,மாகாணங்களிலிருந்து ஏராளமாகக் காணமும் வாங்கி வருகிறோம். நம் மாகாணத்திலிருந்து இலங்கைக்கும், மற்றும், சில இடங்களுக்கும் முந்நூறாயிரம் தன் அரிசி வரை ஏற்றுமதி செய்கிறோம். அப்படி ஏற்றுமதி செய்வதை நிறுத்திக்கொண்டாலும், நாம் வருடந்தோறும் நானூறாயிரம் தன் அரிசி இறக்குமதி செய்தாகவேண்டும். கொச்சியும் திருவாங்கூரும் வருடத்திற்கு நானூறாயிரம் தன் அரிசி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றன. அவ்விறக்குமதி நின்றுபோனால்,நம் மாகாணத்திலிருந்தாவது அவற்றிற்கு அனுப்பியாகவேண்டும். இப்படியாகத் தென்னிந்தியாவின் தேவை பூராவையுங்கவனித்தால் அரிசிக்குறைவு எண்ணூறாயிரம் தன் ஏற்படும். வேறு தானியங்கள் வெளிநாடுகளில் சாகுபடியாகிறதில்லை யாதலால், அவற்றை வெளிநாடுகளிலிருந்து நாம் பெறவும் முடியாது. சண்டையின் காரணமாகப் பர்மாவிலிருந்து வரும் அரிசி இப்பொழுது குறைந்துவிட்டது; இனி

வராமல் பூராவும் நின்றுபோகலாம். ஆகை யால், உணவுப்பொருள் சாகுபடியை அதிகப் படுத்திக்கொண்டா லொழிய, நாம் சங்கடப் படவேண்டியது வரும்.

நாம் இரண்டே இரண்டு வகையாகத் தான் தானிய விளைவை அதிகப்படுத்த முடியும். தானியங்கள் விளையும் பரப்பை அதிகப் படுத்தலாம்; அதிக விளைவைத் தரத்தக்க முறைகளைக் கையாண்டு, விளைவை அதிகப் படுத்தலாம்.

சாகுபடி செய்யக்கூடிய நிலங்களெல்லாம், சாகுபடி செய்துவரப்படுகின்றன. சாகுபடி யாகாதிருக்கும் தரிசு நிலங்கள் தண்ணீர்ப் பாசன சௌகரிய மிருந்தாலொழிய விளையக் கூடியதாயில்லை. அவற்றில், காணம் ஆமணக்கு முதலியனவே விதைக்கலாம். தண்ணீர்ப் பாசனத்தை அதிகப்படுத்தவேண்டும் முயற்சி அரசாங்கம் செய்துவருகிறது. ஆனால், அது ஒரு விநாடியில் செய்துமுடிக்கக் கூடிய காரிய மல்ல; கொஞ்ச காலம் பிடிக்கவே செய்யும். நிலக்கடலை, கரும்பு முதலிய வியாபாரப் பயிர் கள் சாகுபடி செய்வதைக் குறைப்பதற்கான முயற்சியும் செய்துவரப்படுகிறது.

என்றாலும், அதிக விளைவைத் தரக்கூடிய தான முறைகளைக் கையாடுவதுதான் இப்பொழுது சாத்தியமாகும். அதுவும், வானவாரி நிலங்களில் சாத்தியப்படாது. மழைபெய்யு மென்று திட்டமாகச் சொல்லக்கூடியதில்லை; தொடர்ந்து ஒழுங்காகப் பெய்யக்கூடு மென் றும் சொல்லமுடியாது. ஆகையினால், நாம் நிலத்திலுள்ள ஈரம் வீண்போகாதபடி பாது காத்துச் சாகுபடி செய்யவும் அதிக விளைவைத் தரக்கூடிய விதையை விதைக்கவுமே கூடும். நிலத்தில் விழும் மழைத் தண்ணீர் ஓடிவிடாத படி எப்படிக் காத்துக்கொள்ளலா மென்பதை விவசாய அதிகாரிகள் நிலங்களிலும் செய்து காட்டிவருகின்றனர்.

அதிக விளைவைத் தருவதற்கு உழவு ஒரு காரணமாகும். நாட்டு மரக்கலப்பையால் நிலத்தை ஐந்து முதல் ஏழுதடவை உழவேண் டியிருக்கிறது. இரும்புக் கலப்பையால் அதற் கும் குறைந்த உழவாலேயே அதுபோலவோ அல்லது அதற்கும் நல்லதான பலனையோ அடையலாம். இந்தக் கலப்பைகள் ஒவ்வொரு தாலுகாத் தலைமைத் தானத்திலும் வைக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் கலப்பைகளின் கிரயம் 6 முதல் 10 ரூபாவுக்கு மேற்போகக் கூடியதில்லை. இந்தக் கலப்பை வாங்குவதற்குக் கையில் பணமில்லை; ஏழை யென்றாலும் தக்காவிக்கடனாக வாங்கிக்கொள்ளலாம். விவசாய முறை அதிகாரி (Demonstrator) இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வார். கலப்பைக் கிரயத்தை இரண்டொரு தடவையாக நிலவரி யோடு சேர்த்துச் செலுத்திவிடலாம்.

சாணியுரம் சோளம் முதலிய தானியங் களுக்கும் தோட்டப் பயிர்களுக்கும் சிறந்த உரமாகும். ஆகையால், அதனை புன்செய்க ளுக்கும் தோட்ட நிலங்களுக்கும் போடுவதால், அதிக இலாபமுண்டு. அப்படி நிலங்களில்லை யென்றால், நெல் சாகுபடியாகும் நிலங்களுக் குப் போடலாம்.

தண்ணீர்ப் பாசன சௌகரியமுள்ள நிலங்களில், உணவுத் தானியங்கள் அதுவும் நெல் அதிகமாக விளைகின்றன. நெல்லின் விளைவு ஏக்கருக்கு 1200 இராத்தலே ஆகிறது. அது பிறநாடுகளின் விளைவை நோக்க வெகு குறைவென்றே சொல்லவேண்டும். இந்தக் குறைவான விளைவிற்குக் காரணம் தண்ணீர்ப் பாசனமே யில்லாததாகும்; அல் லது ஏகதேசமே தண்ணீர் பாய்வதாகும். தொளியில் விளைகிற மாதிரி நெல் வேறு எந்த நிலத்திலும் விளையக்கூடியதில்லை. இன்னொரு காரணம் நிலம் வெளியூராருக்குச் சொந்தமாக இருப்பதும் நிலத்துக்குரிமை யில்லாதவர்கள் சாகுபடி செய்வதுமாகும். நிலத்துக்குச் சொந்தக்காரர் அவருடைய வரவு குறையா திருக்க வேண்டுமென்று நினைப்பதைத் தவிர்த்து நிலம் விருத்தியாக வேண்டுமென்று நினைப்பதில்லை. சாகுபடி செய்கிறவனுக்கு

அக்கறை யிருந்தாலொழிய அதிக விளைவை நாம் எதிர் பார்க்கமுடியாது. நிலங்களை எட்டு முதல் பத்துவருடங்களுக்குக் கட்டுக்குத்தகைக்கு விடுவதென்றும் நிலத்தைக் கட்டுக்குத்தகைக்கு எடுக்கிறவன் விருத்தியாகச் செய்யும் செலவில் ஒருபாகத்தை நிலத்துக்குச்சொந்தக்காரன் கொடுக்கவேண்டுமென்றும் இருந்தால், நிலத்தில் பாடுபடுகிறவனும் அக்கறையாகப் பாடுபடமுடியும். இப்படித் திருத்தங்களெல்லாம் சட்ட பூர்வமாகத் தான் செய்துகொள்ள முடியும். அதற்கு நாள் செல்லும். ஆகையால், இந்த வகையிலும் இப்பொழுது விருத்தியை எதிர் பார்க்கமுடியாது. இந்த நிலைமையிலும், நிலத்தைச் சொந்தக்காரனே சாகுபடி செய்வதாயிருந்தாலும் சரி, வாரத்திற்காகச் சாகுபடி செய்வதாயிருந்தாலும் சரி, அவர்கள் சிறந்த முறையைக் கையாடலாம்; நல்ல விதையை விதைக்கலாம். அப்படியானால்தான் அதிக விளைவைக் காணமுடியும்.

நம் மாகாணத்தின் பலவேறு பாகங்களுக்கும் அவ்வவற்றிற்குப் பொருத்தமாக எழுபது வகை விருத்தியான நெல் விதைகள் விவசாய இலாகா உண்டுபண்ணி யிருக்கிறது. அவை உள்ளூர் நெல்லைக் காட்டிலும் எட்டு முதல் பதினைந்து சதம் அதிக விளைவையும் தருகின்றன. அவை சாதாரணமாக எல்லாச் சமுசாரிகளுக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன. அவர்கள் உள்ளூர் நெல்லை விதைப்பதை விட்டு இப்படி ஒரு விருத்தியான விதையை விதைப்பதால் நம் மாகாணம் பூராவும் ஐந்து சதத்திற்குக் குறையாமல் எட்டுச் சதம் வரை அதிகமாக விளையும். விவசாய இலாகாவில் நல்ல விதை எப்பொழுதும் கிடைக்குமென்றாலும், சொற்ப அளவே அதனிடமிருந்து கிடைக்கக்கூடும். நடப்பு வேளாண்மையில் ஏராளமாக விதை தயார் செய்வதற்கும் விவசாய இலாகா ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகையால், எல்லாருக்கும் விருத்தியான விதை கொடுக்கமுடியாது போனாலும், அனேகருக்குக் கொடுக்கக்கூடும்.

சமுசாரிகள் அளவுக் கதிகமாகவும் விதைத்து வருகிறார்கள். அதனால் விதை வீணாவது மட்டுமல்ல; விளைவும் குறைந்து விடுகிறது. ஏக்கருக்குச் சாதாரணமாக 50 முதல் 100 இராத்தல் விதைக்கின்றனர். விவசாய இலாகா சிபார்சு செய்கிறபடி 20 இராத்தலாகக் குறைத்துக்கொண்டால், அந்த விதை மிச்சமே பல்லாயிரத் தன் (Ton) களாகும். குறைந்த விதை நடுகையால் நாமிடும் உரத்திற்கும் அளவுக்கும் தக்கதாக அதிகமாகவும் விளையும்.

ஆக, நெல் விளைவை அதிகப்படுத்துவதற்குச் சிறந்த வழி அதற்கேற்ற உரமிடுவது தான். நெற்பயிர் ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து 48 இராத்தல் காலகம் (Nitrogen) சுமார் 23 இராத்தல் எரியக்காடி (Phosphoric acid) 41 இராத்தல் சாம்பர உப்பு (Potash) இவற்றை எடுத்துக்கொள்ளுகிறது. நம் நிலங்களில் சாம்பர உப்பு ஏராளமாக இருக்கிறது. ஆகையால், சாம்பர உரம் இடவேண்டியதில்லை. நம் நிலங்களில் எற்கனவே எரியக்காடியும் காலகமும் குறைவாக இருப்பதால், இந்த உரங்களை ஏதாமொரு வகையாக நிலத்துக்குச் சேர்த்தாலன்றி, நல்ல விளைவை நாம் காண முடியாது.

வருடத்திற்கு இரண்டு மூன்று தடவை நெல் சாகுபடி செய்தாலும் நாம் நம்முடைய நிலங்களுக்குப் போதுமான உரமிடுவதில்லை. நாம் போதிய உரமிட்டு நிலத்தின் செழிப்பை அதிகப்படுத்திக்கொள்ளாமல், நல்ல உரமிடுகிற பிறநாட்டு விளைவோடு நம் நாட்டு விளைவை ஒப்பிட்டு வருத்தப்பட நியாயமில்லை. அனேக சமுசாரிகள்நெல்லுக்கு உரமிடத் தங்களிடத்தில் போதிய வகையில்லை யென்ற அபிப்பிராயத்தோ டிருக்கிறார்கள். அனேக சமுசாரிகள் விவசாய இலாகா சிபார்சு செய்யும் உரங்கள் அவர்கள் தகுதிக்கு மிஞ்சியதென்றும் நினைக்கிறார்கள். இது உண்மையல்ல. சாதாரண சமுசாரியால் சாத்தியமாகுங் காரியங்

களையே விவசாய இலாகா சிபார்சு செய்து வருகிறது.

காலகமும் எரியக்காடியும் நெற்பயிருக்கு அவசியமென்று சொல்லப்பட்டது. அவ்விரண்டிலும் காலகம் வெகு முக்கியமானது. இதுதான் பயிரை வளரச் செய்வது. இதனைச் சாணி உரமாகவும் குழையாகவும் பிண்ணாக்காகவும் நவச்சியக் கந்தகை (Ammonium sulphate) சுதையச் சயனதை (Calcium cyanide) உவரக்காலகை (Sodium nitrate) முதலிய உரங்களாகவும் இடலாம்.

காலகத்தைக் குழையுரமாக இடுவதே, நெல்லுக்குச் செலவு குறைந்த நல்ல உரமிடுவதாகும். குழையுரம் சேகரிக்க விதையின் கிரயமும் கொஞ்சம் உழைப்புமே சமுசாரியின் கைப்பொறுப்பாக வரும். ஒரு ஏக்கர் நிலத்தில் உண்டாகும் பசுந்தாளுரம் இரண்டு மூன்று ஏக்கருக்குச் சாதாரணமாகப் போதும். ஓர் ஏக்கருக்கு வேண்டிய உரத்தின் கிரயம் 2 முதல் 4 ரூபாவுக்கு மேற் போகாது. இது நிரம்பவும் மலிவல்லவா? நிலே பயிராயிருக்கும் பொழுதே அதாவது நெல் அறுவடையாகு முன்னமேயே பசுந்தாளுரவிதையை விதைத்து விடலாம்; அல்லது அறுத்த உடனேயே விதைத்து இரண்டொரு தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளலாம். அது ஒரு பூ நிலமாக இருந்தாலும், பசுந்தாளுரப் பயிர் சாகுபடி செய்வதற்கு இரண்டொரு தண்ணீர் நீர்வையில்லாமலும் பாய்ச்சிக்கொள்ளலாம்.

உணவுப் பொருள் விளைவை அதிகப்படுத்த விவசாய இலாகா செய்துவரும் விருத்திகளையெல்லாம் தெரிந்துகொள்ளுவதற்கு விருத்தி முறை அதிகாரிகளுடன் (Demonstrators) ஒத்துழைத்து விவசாய சங்கங்களும் அமைத்துக்கொள்ளலாம்; அவற்றால் மிகுந்த நல்ல பலனுமடையலாம்.

The Madras Director of Agriculture.
Press Note.

---

5. கூட்டுறவு:

சென்னைக் கைத்தறி நெசவாளர் மாகாணக் கூட்டுறவுச் சங்க அறிக்கை, 1940-41.

(சாரம் I)

இவ்வாண்டில், கைத்தறி நெசவைப் பற்றிய புள்ளி விவரங்கள் தெரிய, நம்மிந்திய அரசாங்கம் ஒரு கழகத்தை (Fact finding Committee) நியமித்தது. ஆலைகளில் கீழ்த்தர நம்பர் நூல்களைக் கொண்டு நெய்யக்கூடாதென்று தடுப்பதின் மூலம் கைத்தறி நெசவை எவ்வளவு தூரம் விருத்தி செய்யக் கூடுமென்பதைக் கவனிக்கவும் அந்தக் கழகம் கேட்கப்பட்டிருந்தது. இந்த மாகாணச் சங்கத்தையும் இன்னும் இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் நெசவாளர் சங்கங்களையும் அந்தக் கழகம் விசாரித்த பொழுது, அப்படிச் செய்யச் சாத்தியப்படாதென்றும் கைத்தறித் துணிகளோடு போட்டியாக வரும் ஆலைத் துணிகளின் பேரில் சுங்கம் (Excise) விதிப்பதே போதுமென்றும் சொன்னோம். அந்தக் கழகத்தின் சிபார்சுகளையும் அவற்றின் பேரில் நம் இந்திய அரசாங்கம் செய்யும் உத்தரவையும் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தச் சங்கம் தன் வேலைகளை விருத்தியாகச் செய்வதற்காக, சென்ற ஆண்டு சனவரி மாதம் ஒரு உட்கழகத்தை நியமித்தது, இவ்வாண்டில் நடந்த இன்னொரு முக்கிய காரியமாகும்.

அந்த உட்கழகம் தென் பிராந்தியத்தில் சேலம் கோயம்புத்தூர் இராமநாதபுரம் மதுரை முதலிய ஜில்லாக்களிலும் அதேமாதிரியாக வடக்கே சில ஜில்லாக்களிலும் விருத்தியான வேலைகளை முதலில் செய்து வரவேண்டுமென்றும், புதிதாக நெசவாளர் சங்கங்களேற்படுத்துவதற்கு ஒரு தனித் துணைப் பதிவாளரை (Special Deputy Registrar) நியமிக்க வேண்டுமென்றும், கிராமச் சங்கத்தில் 25 தறிக்குக் குறையாமல் வேலை செய்ய வேண்டுமென்றும் பங்குத் தொகை ரூ. 375க்குக் குறையாதிருக்க வேண்டுமென்றும் அதே மாதிரியாகப் பட்டினச் சங்கத்தில் 50 தறிக்குக் குறையாமலும் பங்குத்தொகை ரூ. 750 க்குக் குறையாமலிருக்க வேண்டுமென்றும் 200 தறிகளுக்குக் குறையாதிருக்கும் ஊர்களிலேயே முதலில் சங்கங்களைத் துவக்க வேண்டுமென்றும் சிபார்சு செய்தது.

இந்தச் சங்கத்தோடு இணைக்கப்பட்ட சங்கங்களில் 22 சங்கத்தாருக்குத் தறிகளேயில்லை. 51 சங்கங்களில் 25 தறிகளுக்குங் குறைவாக இருந்தன. 25 தறிகளுக்கும் குறைவாயிருக்கும் சங்கங்களில் பிரயோசனமான வேலை கொஞ்சமும் செய்து கொள்ள முடியாததால், இந்தச் சங்கங்களில் 25 தறிகளுக்குக் குறையா திருக்கும்படி அமைக்கும் படியாகத் துணைப் பதிவாளர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றார்.

பழைய சங்கங்களுக்குப் புத்துயிரளிக்கவும் அவற்றின் ஆட்சியைச் சரிபெறச் செய்யவும், சங்கங்களுக்குக் கடன் தரும் பாங்குகளுக்கும் அவற்றில் தவணைத்தொகை போட்டு வரும் பொது சனங்களுக்கும் அவற்றில் நம்பிக்கை ஏற்படும் படியாகவும் இளம் பார்வையாளர் (Junior Inspectors) களை 60 தறி வரைக்கும் அதற்கும் மேலுள்ள சங்கங்களின் சம்பள அமைச்சர்களாக நியமிக்கவும் 40 தறிக்கும் அதற்கும் மேலாகவுமுள்ள தறிகளில் அதிகாரப் பற்றில்லாதவர்களை அமைச்சர்களாக நியமிக்கவும் 25 தறிக்கு மேலும் 40 தறிக்குள்ளாகவும் உள்ள சங்கங்களில் அதிகாரப் பற்றில்லாதவர்களை மேலாளர் (Manager) களாக நியமிக்கவும் அமைச்சர்கள் மேலாளர்கள் பேரில் சங்கங்களின் ஆட்சிப் பொறுப்பைப் பூராவாகச் சுமத்தி வரவும் இந்த உட்கழகம் சிபார்சு செய்தது.

போதிய பணவசதி யில்லாததினாலேயே அனேக சங்கங்களின் வேலையை விருத்தி செய்ய முடியாது போகிறதாதலால், பிரதம சங்கங்களிலும் இந்த மாகாணச் சங்கத்திலும் பங்குத் தொகையை வெகுவாகச் சேர்த்து வர வேண்டுமென்றும் பிரதம சங்கங்களில் பங்குத் தொகைக்குத் தக்கதாகவே மத்திய பாங்குகள் அல்லது மாகாணச் சங்கம் கடன் கொடுத்து வரவேண்டு மென்றும் இந்த உட்கழகம் சிபார்சு செய்தது. துணி நெசவைச் சாத்திரீக முறைப்படி அதிகப்படுத்தி வர வேண்டு மென்றும் விற்பதற்கான ஏற்பாடு பெருவாரியாகச் செய்து வரவேண்டு மென்றும் யோசனைகளும் சொல்லிற்று.

பிரதம சங்கங்களின் மேற்பார்வை இது வரை மாகாணச் சங்கத்திலிருந்து வந்ததை, அந்தந்தச் ஜில்லா துணைப் பார்வையாளருக்கு (Deputy Registrar) மாற்றப் பட்டது. இந்தச் சங்கத்தின் கீழ் பிரதம சங்கங்களை மேற்பார்த்து வந்த மேற்பார்வை யதிகாரிகளின் ஊழியத்தையும், அவர்களால் பலவேறிடங்களில் சிதறி யிருக்கும் சங்கங்களைச் சரியாக மேற்பார்த்து வருவது சிரமப்பட்டதால், தேவை யில்லையென்று 1-4-41உ முதல் நிறுத்திக் கொள்ளப் பட்டது. நம் மாகாணப் பதிவாளர் துணைப் பதிவாளர்களை நெசவாளர் சங்கங்களின் வேலையில் மிகுந்த அக்கறை எடுத்து வரவேண்டு மென்றும் அவற்றை அடிக்கடி பார்வையிட வேண்டுமென்றும் சம்பள அமைச்சர்களும் மேலாளர்களும் செய்துவரும் வேலையை நெருக்கிக் கவனித்து வரவேண்டு மென்றும் பிரதம சங்கங்களின் வேலை விருத்தியாக நடந்துவர அவற்றைத் தூண்டி வர

வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். துணைப் பதிவாளர்களின் கீழ் வேலைபார்க்கும் பார்வையாளர்களையும் அந்தச் சங்கங்களை அடிக்கடி பார்த்து வரவேண்டுமென்று கட்டளை யிட்டிருக்கிறார்.

மாகாணச் சங்க ஆட்சிக் கழகத்தில் பதினைந்து பேர்கள் இருந்ததைப் பத்தொன்பது பேர்களாக்கி அவர்களில் நூல் நூற்கும் ஆலைகளைப் பற்றியும், உலுங்கிகள் துண்டுமடிகள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாவதைப் பற்றியும், உயர்ந்ததர நம்பர் நூல்கள் இறக்குமதியாவதைப் பற்றியும், கைத்தறி, தொழிற்சாலைகளைப் பற்றியும், நம் மாகாண நூல் வியாபாரத்தைப் பற்றியும் தெரிந்த நிபுணர்களையும் சேர்த்துக் கொள்ளுவதென்றும் அவர்களுடைய யோசனையானது நூல் சாயம் முதலியன வாங்குவதற்கும் கைத்தறிகளில் நெசவாகும் துணிகளை விற்பதற்கும் பயன்படு மென்றும் கருதப் பட்டது.

இந்தத் திட்டத்தை ஆட்சிக் கழகமும் ஒப்புக்கொண்டது. இதனை அனுசரித்துச் சென்ற ஆண்டு ஏப்பிரல் முதல் ஆண்டு வரவு செலவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டது. அந்தத் திட்டமும் நம் இந்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்தின் பேரில் நடைமுறையிலிருந்து வருகிறது.

மாகாணப் பதிவாளர் முயற்சியின் பலனாக மத்திய பாங்குகளும் தாராளமாக இந்தச் சங்கத்தில் பங்குகள் எடுத்திருக்கின்றன. மதுரை ஆலைமட்டும் பதினாயிரம் ரூபாவுக்குப் பங்கெடுத்திருக்கிறது. நூல் நூற்கும் ஆலைகளின் அபிவிருத்தியும் கைத்தறி நெசவின் அபிவிருத்தியைப் பொறுத்ததாக இருப்பதால், அவற்றை இந்த மாகாணச் சங்க வேலையிலும் பங்குத் தொகையிலும் அதிகப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இந்தச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

25 தறிகள் வேலை செய்கிற சங்கங்களுக்கு 25 ரூபாவும், அந்தச் சங்கம் சென்ற மூன்றாண்டுகளாகவோ அல்லது அதற்கும் குறைவாகவோ வேலை செய்து வருவதாயிருந்தால் அதிகத் தறி ஒன்றுக்கு ஒரு ரூபாவாகவும், மூன்றாண்டுகளுக்கு மேலாக வேலை செய்து வருவதாயிருந்தால் அதிகத் தறி ஒன்றுக்கு அணு பன்னிரண்டாகவும் இனமாக உதவி வரப்படுகிறது. ஆனால், சங்கத்தின் மூலம் நடக்கும் மாதச் சராசரி விற்பனைத் தறி ஒன்றுக்குப் பதினைந்து ரூபாவுக்குக் குறையாதிருக்க வேண்டும்; எக்காரணத்தை யிட்டும் மாத மொன்றுக்கு 60 ரூபாவுக்கு மேல் கொடுப்பதில்லை.

நெசவாளர்களுக்கு நூல் சௌக்கியமாகக் கிடைப்பதுவே வெகுவாகச் சிரமப்படுகிறது. சில சமையம், ஆலையிலிருந்து கிடைப்பதைக் காட்டிலும் வியாபாரிகளிடமிருந்து கிடைப்பது சௌக்கியமாக இருக்கிறது. இந்தக் குறையை நீக்குவதற்காக, இந்த மாகாணச் சங்கம் விலை சௌக்கியமாகவுள்ள காலத்தில், ஏராளமாக வாங்கி நம் மாகாணத்தில் பல முக்கியமான இடங்களில் வைத்திருந்து இந்தச் சங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் சங்கங்களின் மூலமாக நெசவாளர்களுக்குப் பின் கொடுத்து வரலாமென்றும் கருதுகிறது.

நூல் வியாபாரிகளும் மற்றவர்களும் தங்கள் வசமிருக்கும் நூலின் விலையை மட்டும் ஏற்றி விற்கிறார்களேயின்றி அதனை யனுசரித்துத் துணிகளை அவர்கள் எடுத்துக்கொள்வதுமில்லை; மற்றவர்களுக்கு விற்பதற்குமில்லை. அப்படிக்கில்லாமல், அரசாங்கத்தின் மூலமாகவே எல்லா நெசவாளர்களுக்கும் நூல் செலவிடப்பட வேண்டு மென்பதை மே. தி. கவர்னர் அவர்களின் ஆலோசனைச் சபையைச் சேர்ந்த இரண்டாமவர் (Second adviser) இடம் சொல்லிவருவதற்காக இந்தச் சங்கத் தலைவரும், உபதலைவரும், கூட்டுறவுப் பதிவாளரும், கைத்தொழிலிலாகாத் தலைவரும், திரு. இராமகந்தராவும் போயிருந்தார்கள். நூல் விலையையும் செலவையும் ஒழுங்குபடுத்தி வருவதும் அகில இந்திய ஏற்பாடாக இருக்க

வேண்டு மென்றும் அப்படிச் செய்யாது போனால் இருப்பிருக்கும் நூலெல்லாம் அந்த ஏற்பாடில்லாத இடங்களுக்குப் போய்ச் சேர்ந்து விடுமென்றும் சொல்லிவிட்டு வந்தார்கள். சென்ற ஆண்டு செப்டம்பர் முதல் டிசம்பர் வரை மதுரை ஆலையிலிருந்து 1528 பேல் நூல் வாங்கிப் பிரதம சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கூடியவரை சுமாரான விலைக்குக் கொடுத்துதவியதற்காக மதுரை ஆலை தோக் (Doke) துரை அவர்களுக்கு இந்த மாகாணச் சங்கம் பெரிதும் கடைமைப்பட்டிருக்கிறது. பின் கோயம்புத்தூர் பங்கச ஆலை, இராதாகிருட்டினா ஆலை, வசந்தா ஆலை, தாமரை யாலை ஒவ்வொன்றும் பத்தரை நம்பர் முதல் அறுபதாம் நம்பர் வரை பேல் ஒன்று நானூறு இராத்தல் கொண்டதாக 79½ பேல் கொடுத்து வரச் சம்மதித்தன. இலட்சுமி ஆலை, கோயம்புத்தூர் நூல் நூற்கும் நெசவாலை, அரங்கவிலாச ஆலை, வைசிய ஆலை, பயோனியராலை இவற்றுடனும் சௌகரியமாக நூல் கொடுத்துவர வேண்டுமெனக் கடிதப் போக்குவரவும் நடந்து வருகிறது. இந்த ஆலைகளிலிருந்து மாதமொன்றுக்கு 137 பேல் கிடைக்கக் கூடுமென்று கருதப்படுகிறது. இப்படியாகப் பிரதம சங்கங்களுக்குதவ முன் வந்திருக்கும் கோயம்புத்தூர் ஆலைகளுக்கும் இந்த மாகாணச் சங்கம் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

சாயங்களும் சண்டை ஆரம்பமானதிலிருந்து நெசவாளர்களுக்குச் சரியாகக் கிடைத்துவரவில்லை. இந்தச் சங்கம், கூட்டுறவுப் பதிவாளருக்கும் கைத்தொழிலிலாகாத் தலைவருக்கும் மாகாண மத்திய அரசாங்கங்களுக்கும் எதிரிகளின் சொத்துப் பரிபாலனரின் (Custodian of enemy properties) கைக்கு வந்து சேர்ந்திருக்கும் செர்மன் சாயங்களைக் கொடுத்துதவும்படியாகக் கேட்டு வந்தது; ஆனால், அவை கிடைக்கவில்லை. அதன் மேல், மதுரை தவிர வேறு மூன்று இடங்களிலும் தொழிற் சாலைகளாரம்பித்து இந்தச் சங்கமே சாயம் தயாரித்து வரு[illegible] திருக்கிறது.

கைத்தறித் துணிகளைக் கூடியவரை சௌக்கியமாகவும் ஒரேமாதிரியாகவும் விற்றுவர வேண்டுமென்று இணைக்கப்பட்ட சங்கங்களை இந்தச் சங்கம் தூண்டிவருகிறது. நூல் கிரயம் கூலியுடன் வட்டி முதலிய சில்லறைச் செலவுகளுக்காக ரூபாவுக்குக் காலணா சேர்த்துக் கொள்ளும்படிக்கும் சங்கத்தின் செலவுகளுக்காக அதற்கு மேல் மூன்றேயரைக்கால் சதம் கூட்டி அந்த விலையைச் சீட்டிலெழுதித் துணியின் பேரில் ஒட்டிக் கொள்ளும்படிக்கும் வெளியூரில் சங்கம் நேராகவோ காரியக்காரர் (Agent) மூலமாகவோ விற்பதென்றால், அதற்கு மேல் ரூபாவுக்கு ஒரு அணா கூட்டிக் கொள்ளும்படிக்கும் வரையறை செய்திருக்கிறது. கடை விலை அதிக வித்தியாசமாக இருந்தால், அதனை அனுசரித்துக் கொள்ளவும் அனுமதித்திருக்கிறது.

இணைக்கப்பட்ட சங்கங்கள் கூடியவரை ஒரேமாதிரித் துணிகளாக நெய்துவரும்படி சொல்லப்பட்டிருக்கிறது. பலவேறு தரங்களை விற்பதற்குச் சிரமமேற்படுவதால் அவ்விதம் சொல்லப்பட்டிருக்கிறது.

மாதிரிப்படிக்கே நெய்து தரவும் இந்தச் சங்கம் இணைக்கப்பட்ட சங்கங்களைப் பழக்கப்படுத்திவருகிறது. இதற்காகத் தறியில் செய்துகொள்ள வேண்டியிருக்கும் திருத்தங்களுக்குப் பண உதவி செய்துவருகிறது.

சங்கங்கள் ஒரே தரமாக நெய்யவேண்டுமென்று வற்புறுத்திவருவதை அனுசரித்து மதுரை, கோயம்புத்தூர், இராசிபுரம், சேலம், உறையூர், புள்ளம்பேட்டை, உப்படா, வெங்கடகிரி முதலிய ஊர்ச் சங்கங்களில் சீலைகள் நெய்யப்படுகின்றன. அம்மாபேட்டை, சேலம், சயகொண்டான், துறையூர், மணமேடு, முறமொண்டா, நாராயணவனம், கல்லிடைக்குறிச்சி முதலிய ஊர்ச் சங்கங்களில் வேட்டிகள் நெய்

யப்படுகின்றன. துறையூர் செவ்வாய்ப்பேட்டை முதலிய ஊர்ச் சங்கங்களில் அங்கவத்திரங்கள் நெய்யப்படுகின்றன. திருச்செங்கோடு சங்கத்தில் மேல்சட்டைத் (Coating) துணிகளும், கண்ணனூர் சங்கத்தில் உட்சட்டைத் (Shirting) துணிகளும், கல்விடைக்குறிச்சி சென்னிமலை சங்கங்களில் துண்டுமடிகளும் நெய்யப்படுகின்றன.

முடிந்த சரக்குகளைச் சரியாக மடித்துப் பாடஞ்செய்து விற்பதானல் பிரியமாக விற்கக்கூடும்; ஆதலால், அதற்காகவேண்டும் எந்திரமும் இந்தச் சங்கம் வாங்கிற்று. ஆனால், முடிந்த சரக்கைச் சென்னைக்கனுப்பிப் பாடம் செய்வதற்கு அதிகச் செலவாவதால், அந்த அந்த எந்திரமிருந்தும் எவருக்கும் பிரயோசனமில்லாமலிருந்து வருகிறது. அம்மட்டுமல்ல; வீணாக வாடகை முதலிய செலவுகள் மாதம் ரூ. 65 ஆகியும் வருகிறது. அதனை விற்றுவிடுவதென்று தீர்மானித்தும் மத்திய அரசாங்கத்தின் உத்தரவின்பேரில் விற்கவேண்டியிருப்பதால், அதனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அடோனி மேலப்பாளையம் சங்கங்களுக்கு இரவல் கொடுத்திருந்த பசைபோடும் எந்திரங்களும் இந்தச் சங்கத்துக்குத் திரும்பிவந்துவிட்டன. அவைகளும் வேலையில்லாதிருந்து வருகின்றன.

(தொடரும்)

---

6. கல்வி:

குழந்தை

Dr. Montessori

உலகத்தில் ஒரு குழந்தையைப் பார்த்ததும் நமக்கு என்ன தோன்றுகிறது? அது உலகத்தில் அவதரித்த ஒரு புதிய மனிதனைத் தோன்றுகிறதல்லவா? அந்தக் குழந்தை மிகவும் சிறியதும் சக்தியற்றதுமாய் இருக்கிறது என்று நமக்குத் தோன்றும். ஆனால், அதனைப்பற்றிக் கொஞ்சம் சிந்தனைசெய்தால், அந்தக் குழந்தை ஒரு காலத்தில் ஒரு பெரிய மனிதனாக ஆகப்போகிறான் என்ற உண்மையை அக் குழந்தையிடத்தில் கண்டறிவோம். ஒரு குழந்தை பிறந்தது என்றவுடன் நாம் என்ன எண்ணுகிறோம்? ஒரு தாய் தந்தையருக்கு அந்தப் பிள்ளை பிறந்ததாக எண்ணுகிறோம். தாய் தந்தை குழந்தைக்கு என்ன செய்தார்கள்? கொஞ்சம் சதையைக் கொடுத்தார்கள் என்றுதான் தோன்றும். ஆனால் அது முழு உண்மையல்ல. ஏனென்றால், குழந்தையானது கல்வி ஞானமில்லாமல் மனிதனாக வளர முடியுமா? குழந்தைதான் மனிதனுடைய பெருமை, குணம் முதலியவற்றிற்குக் காரணம். இதனை நாம் மறக்கக்கூடாது. இது மிகவும் உயர்ந்த காரியமல்லவா? குழந்தை உலகத்தில் மனிதனை உயர்த்துவதற்காக உண்டாகிறது. குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்ததும் பெரியவர்கள் 'அது ஒரு பெரிய மனிதனாக ஆகப் போகிறது, உயர்ந்த நிலைமையிலிருக்கப்போகிறது' என்று எண்ணுகிறார்கள். அந்த உணர்ச்சியால்தான் தாய்தந்தையர்கள் குழந்தைகளுக்காகத் தங்கள்உயிரையும்,சம்பாத்தியங்களையும் தத்தம் செய்கிறார்கள். பெரியவர்கள் குழந்தையினுடைய அபூர்வ சக்தியை உணராவிட்டால் இப்பொழுது இருக்கும் நிலைமையைவிடத் தாழ்ந்த நிலைமையை அடைவார்கள்.

குழந்தைகள் சக்தியற்றவைகள் என்றும், அவற்றால் ஒன்றும் செய்யமுடியாது என்றும் பெரியவர்கள் எண்ணிக்கொண்டு அவற்றிற்கு வேண்டிய யாவற்றையும் செய்துகொடுக்க முயலுகிறார்கள். ஆனால், குழந்தையினிடத்தில் கடவுளுடைய சக்தியைப்போலொத்த தன்மை

இருக்கிறது. மனிதர்கள் தங்களைப் போலவே குழந்தைகளும் ஆகவேண்டும் என்று அவற்றிற்கும் தங்களுடைய செய்கைகளைப்போல் செய்யும்படி கற்றுக்கொடுக்கிறார்கள். இதனால் குழந்தையின் குணங்களில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

குழந்தையின் முக்கியப் போக்கைப்பற்றி அநேக தத்துவ விமர்சனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு அமிசத்தில் அது மனிதனைப் போல் வளருகிறது. குணமிசத்தில், மனிதனுடைய குணங்களுக்குக் காரணம் பெரியவர்களால் குழந்தைப் பருவத்தில் கற்றுக் கொடுக்கப்பட்ட குணங்களேயாகும். மனிதனிடத்தில் ஏதாவது கெடுதல்கள் இருந்தால், அதற்கு மூலகாரணம் குழந்தைப் பருவத்தில் இருக்கவேண்டும். இது எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

உலகத்தில் எல்லாருடைய அபிப்பிராயமும் குழந்தைகளைத் திருத்தவேண்டுமென்பது. ஆனால் அது ஏன் குற்றமுள்ளவைகளைப் பற்றிமட்டும் இருக்கவேண்டும்? அனேக தேசங்களில் அனுபவமுறையில் காண்பிக்கப்பட்டிருக்கிறபடி, மனிதனுடைய அந்தரங்கத்திலிருக்கிற குணாதிசயங்களும், மேல்பார்வைத் தோற்றங்களும் குழந்தையின் விரிவேயாகும்; நம்முடைய குணங்களும், பழக்கவழக்கங்களும், சாதிவகைகளும் தேகத்தின் பலம் முதலியவைகளும் இயற்கையினால் ஏற்படுத்தப்பட்டன என்று நாம் நினைப்பது வழக்கம். ஆனால், நம்மிடமுள்ள எல்லாக் காரியங்களும் குழந்தைப் பருவத்தில் உண்டான குணங்களின் விரிவுதான் என்று நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

நம் உணர்ச்சி, பேச்சு, விசித்திரமான எண்ணங்கள், இன்னும் நாம் பெருமையடையும் காரியங்கள் எல்லாம் குழந்தைப் பருவத்தில் இருந்த மனிதனால்தான் விரிக்கப்பட்டது. ஏனென்றால், அப்பொழுதுதான் கற்பனை சக்தி இருக்கிறது. பின்வரும் சிறு காரியத்தைக் கொஞ்சம் கவனித்தால் இது நன்கு விளங்கும். நாம் எவ்விடத்தில் இருந்தபோதிலும் அந்த இடத்திற்குத் தகுந்தபடி வசதி செய்துகொள்ளும் சக்தியை நாம் அடைந்திருக்கிறோம். இந்தியர்கள் இந்தியாவில் சுகமாக இருக்கிறார்கள். இத்தாலிய தேசத்தவர் இத்தாலியில் இருப்பதைச் சுகமாகக் கொள்ளுகிறார்கள். (இதன் ஆசிரியை இத்தாலி தேசத்தவள் ப-ர்.) பல நூறு வருடங்களுக்குப் பிறகு ஒவ்வொரு தேசத்திலும் அனேக மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கும்பொழுது கூடச் சனங்கள் அவ்வப்பொழுதிருக்கும் நிலைமைக்குத் தகுந்தாற்போல் வசிக்கிறார்கள். குழந்தைகளுக்கு அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களுக்குத் தகுந்தபடி நாம் சரிப்படுத்திக்கொள்ளும் சக்தி இருந்திராவிட்டால், நாம் நம்முடைய விவகாரதிகளில் உதவியற்றவர்களாக இருப்போம். ஒரு ஆயிர வருடங்களுக்குப் பிறகு ஏற்படும் மாறுதல்களுக்குத் தகுந்தபடி நாம் சரிப்படுத்திக்கொள்ள முடியாது. ஆனால், அப்பொழுது பிறந்த குழந்தை அந்தக் காலத்தை யனுசரித்த மனிதருக்குக் கற்பிக்கும் இயல்பு உடையதாய் இருக்கிறது. ஆகையால், குழந்தை ஒன்றுமில்லாத வெறும் பாத்திரம்போலன்று. அது மிகவும் சக்திவாய்ந்தது. அந்தச் சக்தியை நாம் கண்டறிய வேண்டும். குழந்தையின் குணாதிசயங்கள் எல்லாம் அதன் செய்கை, நடை உடை பாவனைகளினால் நன்கு விளங்கும். பல வகைகளில் அக்குணாதிசயங்கள் விரிக்கப்பட்டதினால் தான் நமக்கு மனித குணாதிசயங்கள் ஏற்படுகின்றன.

அபிவிருத்தி

குழந்தைகளின் செய்கைகளைப் பற்றிக் கவனித்து அறிவது ஒரு உற்சாகமான காரியமாகும்; உதாரணமாகப் பேச்சின் அபிவிருத்தியை எடுத்துக் கொள்ளுவோம். குழந்தையானது கொஞ்சங் கொஞ்சமாகப் பேச ஆரம்பிக்கிறது. இது அதற்குச் சுபாவமாக ஏற்படுவது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது! குழந்தை பிறந்த ஆறு மாத காலத்திற்கெல்லாம்

பேச ஆரம்பிக்கிறதல்லவா? அப்பொழுது அது சப்தங்களின் வித்தியாசத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறது. அதாவது, சுற்றி ஏற்படும் அனேகவித சப்தங்களுக்கும் இரயில் சப்தம், மோட்டார் சப்தம், மிருகங்களின் சப்தம், பட்சிகள் முதலியவற்றின் சப்தத்திற்கும் பேசும் வார்த்தைகளின் சப்தத்திற்கும் வித்தியாசத்தை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறது. இவற்றைத் தெரிந்து கொள்ளுவது வெறுப்புடன் அல்ல; மிகுந்த ஆவலுடன். அந்த ஆவலினால் குழந்தையின் உடம்பிலும் அவயவங்களிலும் ஒருவித மாறுதல் ஏற்படுகிறது. இந்தச் சப்தங்களின் வித்தியாசத்தைக் கண்டறிவதிலும், வார்த்தைகளைச் சேர்த்து உச்சரிப்பதிலும், அவற்றின் அருத்தத்தைத் தெரிந்து கொள்ளுவதிலும் குழந்தையானது சிரமம் எடுத்துக் கொள்ளுகிறது. இது அதற்கு ஒரு வேலை எனக் கருதவேண்டும். பெரியவர்களுடைய வேலைக்கும் அந்தக் குழந்தையின் வேலைக்கும் வித்தியாசம் உண்டு. அதன் வேலை மேம்பாடானதே. அதனைப் போல் நாம் செய்ய முடியாது. அது உபாத்தியாயர் இல்லாமலே பேசக் கற்றுக்கொள்ளுகிறது. நம்மைப் போன்ற பெரியவர்கள் வேறு புதிய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமானால், நாம் ஒரு உபாத்தியாயரைத் தேடுகிறோம். இலக்கணம் முதலிய பல சாதனங்களைத் தேடுகிறோம். உபாத்தியாயரும் நாமும் எவ்வளவோ பாடுபடுகிறோம். இருந்தும் உபாத்தியாயரைப் போல் நமக்குச் சரியாக உச்சரிக்க வரவில்லை. பெரியவர்கள் எவ்வளவோ பாடுபட்டுப் படிக்கிறார்கள். அனுபவ முறையிலும் பாடுபடுகிறார்கள். வெகு காலம் ஒரு புதிய மொழியைக் கற்றுக் கொண்டபின் அந்த மொழி தெரிந்த ஒருவரிடம் பேசினால் அவர் "பரவாயில்லை; நீ இந்த மொழியில் நன்றாகப் பேசுகிறாய்" என்று சொல்லக் காண்கிறோம்; ஏனென்றால், அவன் பேசுவதிலிருந்து அவன் தன்னுடையதல்லாத வேறு மொழியைப் பேசுகிறான் என்று தெளிவுபடத் தெரிகிறது. நாம் பேசும் மொழிகளுக்குள் உச்சரிப்பு முதலான அமிசங்கள் ஒரே ஒரு மொழியில்தான் நன்றாக அமைந்திருக்கும். அதுதான் நம்முடைய தாய்மொழி. நாம் குழந்தையாயிருந்தபொழுது ஏற்பட்ட மொழியின் அபிவிருத்திதான் இப்பொழுது நாம் பேசுவது.

உணர்ச்சி

குழந்தைக்குச் சில அபூர்வ சக்திகள் இருக்கின்றன; அவை பெரியவர்களிடம் கிடையா. ஒரு ஏழு வயதுள்ள குழந்தைக்கு வாய் நிறையப் பற்கள் வளருகின்றன. அதேபோல் எழுபது வயதுள்ள மனிதன் பல்லின் அனுபவம் அதிகமிருந்தபோதிலும் செய்துகொள்ள முடியுமா? அந்தச் சக்தி தனியாக அந்த ஏழு வயது பருவ காலத்தில்தான் அமைந்திருக்கிறது. இதே மாதிரி, சிலவிதமான சக்தி அமிசங்கள் வாழ்நாளின் சிற்சில பிரத்தியேகமான காலங்களில்தான் அடைகின்றன. தற்கால சரீரசாத்திரம் இதனைப்பற்றி விவரமாகக் கூறுகிறது.

ஒரு பிராணியானது ஒருவித உணர்ச்சி சக்தியை அடைகிறது. அந்தச் சக்தி அந்தப் பிராணிக்கு ஒருவிதக் குணத்தை உண்டாக்குகிறது. அந்தக் குணம் முழுமையும் உண்டான பிறகு அந்தச் சக்தி மறைந்துவிடுகிறது. அதனைத்தான் உணர்ச்சி காலம் என்று சொல்லுகிறோம். ஒரு குழந்தையினிடத்தில் உணர்ச்சி காலங்களை நாம் கவனிக்கக்கூடும். ஏனென்றால், ஒரு காலத்தில் குழந்தையானது தன் தொனி அவயவங்களை ஒரு தினுசாக மாற்றிக்கொண்டு தன்னுடைய தாய்மொழியை எப்படிப் பேச வேண்டுமோ அந்தப் பிரகாரம் பேசுகிறது. இவ்விதமான அந்தரங்க உணர்ச்சியால் தூண்டப்பட்டு அது மேன்மேலும் விருத்தி செய்கிறது. இம்மாதிரி அபிவிருத்தியால்தான் அது சுபாவமாகவே மனிதனைச் சரிப்படுத்திக் கொள்ளுகிறது. அதனுடைய முயற்சியால் அது இவ்விதம் செய்துகொள்ளுகிறது. அதற்குச் சுற்றிலும் சௌகரியங்கள் இல்லாவிட்டால், அது பெரியவர்களைத் தொந்தரவு

செய்ய ஆரம்பிக்கிறது. ஒரு முக்கியமான வேலையைச் செய்து முடிக்கவேண்டிய ஒரு மனிதனுடைய புத்தியைப்போல் குழந்தையும் பரபரப்புடையதாய் இருக்கிறது. ஆகையால், அது சாமான்களை எடுப்பதும், பார்ப்பதுமாயிருக்கிறது. அதன் அந்தரங்க உணர்ச்சியை ஒருவராலும் தடுக்க முடியாது. குழந்தைக்கும் பெரியவர்களுக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். எவ்வளவு அடித்தாலும் வைதாலுங்கூடக் குழந்தை சும்மாயிருப்பதில்லை. ஏனென்றால், அதன் வேலையை அது செய்து முடிக்கும்படி அந்தரங்க உணர்ச்சி தூண்டுகிறது. குழந்தை பிறந்தது அது ஒரு மனிதனாகவேண்டியே. அதனை அது தவறாமல் செய்து முடிக்கும். ஆகையால், அதற்கு வேண்டிய சௌகரியங்களைக் கொடுத்து அதனை யதேச்சையாக விட்டுவிட வேண்டும். ஒரு அதிசயமான காரியம் குழந்தையினிடம் என்னவென்றால் அது சோர்வடையாத ஒரு வேலைக்காரன். அது மனிதனாக வேண்டிய நோக்கத்துடன் வேலை செய்கிறது.

ஆகையால், கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்கள் குழந்தைகளின் பருவ காலங்களை அனுசரித்து அதற்குத் தக்கபடி நடத்திக் கொண்டுவந்தால், படிப்பின் பயன் மிகவும் ஆச்சரியகரமாக இருக்கும். குழந்தையின் நோக்கத்திற்கு விருத்தமாகப் போனோமானால் குழந்தைக்கும் நமக்கும் விரோதம் உண்டாகும். ஆகையால்தான், குழந்தை மிகவும் சத்தி வாய்ந்ததென்றும், அதற்குள் அபூர்வ சத்திகள் மறைந்திருக்கின்றன வென்றும், அதற்குத் தான் ஒரு மனிதனாக வேண்டும் என்ற அவா உள்ளதென்றும் நினைத்து உபாத்தியாயர் அந்தக் குழந்தைக்கு ஒரு வேலைக்காரனைப்போல் நடந்துகொண்டு அதன் நோக்கங்களைப் பூர்த்தி செய்துவைக்க வேண்டும்.

(மொழிபெயர்ப்பு) பாலர் கல்வி.

---

7. கைத்தொழில்: குடிசைத் தொழில்

பம்பாய் கைத்தறி நெசவறிக்கை, 1932.

(சாரம்)

(நெசவுப் புள்ளி விவரங்கள் தெரிவதற்காக நியமித்த கழகத்தின் அறிக்கை வெளிவந்ததும் அதன் சாரத்தை இங்கே குறிப்பதாக இருந்தோம். அந்தக் கழகம் தன் அறிக்கையை அரசாங்கத்துக் கனுப்பியும் அரசாங்கம் அதனை இதுவரை வெளியிடக் காணோம். நெசவுத் தொழிலுக்குப் பல உதவிகள் அரசாங்கம் செய்துவர வேண்டுமென அந்தக் கழகம் சிபார்சு செய்திருக்கக் கூடுமென்றும், ஆகையால் அது வெளிவரத் தாமதமாகுமென்றும் நினைக்கிறோம். நெசவின் நிலைமையை இந்த அறிக்கையும் ஒருவாறாகத் திரட்டிச் சொல்லுவதால், இதன் சாரத்தையாவது தரலாமெனக் கருதி இதனை இப்பொழுது எழுதுகிறோம். ப. ர்.)

நெசவுத் தொழில் இதுவரை நிலைத்திருப்பது மட்டுமல்ல; ஆலைப் போட்டியைப் பொருட்படுத்தாமலும் விருத்தியாகி வருகிறது; இனிமேலும் விருத்தியாகி வரக்கூடும். வெள்ளித் தங்கச் சரிகைச் சேலைகள் அகலக் கரை போட்ட சேலைகள் பணம்பெற்ற பட்டுகள் அழகான வேலைத் திறமையமைந்த புடைவைகள் இன்னும் கைத் தறிகளிலேயே நெய்து வரப்படுகின்றன. இந்துப் பெண்கள் தங்கள் திருமணங்களிலும் திருவிழாக் காலங்களிலும் சமையச் சடங்குகளிலும் உடுத்திவரும் ஆடைகள் 60-ம் நம்பர் முதல் 100-ம் நம்பர் வரை பருத்தி பட்டுநூல்களால் கைத்தறிகளிலேயே நெய்யப்படுகின்றன. இதுவரை, இப்படி ஆடைகள் ஆலைகளில் நெய்யப்படவுமில்லை.

இனிமேலும் இவ்வளவு நயமாக ஆலைகளில் நெய்துகொள்ள முடியுமென்பதும் சந்தேகம்.

கைத்தறி நெசவு வெளிநாட்டுப் போட்டியுடனல்லாமல் உள்நாட்டு ஆலைப்போட்டிக்கும் எதிராக வெகுகாலம் நிலைத்து நீடித்திருக்க முடியாதென்றகருத்துப் பரவிவருகிறது.கைத்தறி நெசவும் பழையபடியில்லை; பலவிதமாக விருத்தியாகிக்கொண்டே வருகிறது. நெசவுக்கு ஆலை நூலே கிடைப்பதால், ஆலைப்போட்டியையும் பொருட்படுத்தாது வேலை செய்ய முடிகிறது. நாளுக்குநாள் கைத்தறி நெசவுக்காகச் செலவாகும் நூல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. கைத்தறி நெசவைச் சரியாகக் கவனித்து விருத்திக்கான சௌகரியங்களும் அரசாங்கம் செய்துவந்தால், கைத்தறி நெசவு திட்டமாக விருத்தியாகக் கூடும்.

கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய நெசவு முறையைக் காலத்துக்கேற்ப மாற்றிக் கொள்ளுகிறார்களில்லை. கிராமத்தார்களுக்கு மட்டும் உதவக்கூடிய துணிகளை நெய்து வருகிறார்களேயன்றி பணக்காரர்கள் விரும்பக் கூடிய மாதிரிப் புதுப் புதுத் துணிகள் நெய்கிறார்களில்லை. என்றாலும், இந் நாட்டுப் பெண்களும் கிராமவாசிகளும் தங்கள் பழக்கங்களை மாற்றிக்கொள்ளாதிருக்கும்வரை கைத்தறிகளில் நெய்யும் குறைந்த நம்பர் நூல் துணிகளும் செலவாகிக்கொண்டு வருவதற்குத் தடையிராது. 20 முதல் 40-ம் நம்பர் வரை நூல்களின் நெசவே வழக்கத்தில் அதிகமாக இருந்துவருகிறது.

நெசவுகாரர்களில் 5 சதம் சொந்தத் தறிகள் வைத்து வேலை செய்வதோடு தரகர்களாகவுமிருக்கின்றனர். அவர்கள் சொந்தத்தில் 10 முதல் 50 தறிகளும் அதற்கு மேலும் வைத்து நடத்தி வருகின்றனர். அவர்கள் நூலும் ஏராளமாக வாங்கி வைத்துக்கொள்ளுகின்றனர். அவர்களிடம் இருப்புச் சரக்கும் நிரம்ப இருந்துவருகிறது.

அவர்களுக்கு அடுத்த தரமாக 20 சதம் வரை, சொந்தத்தில் நூல் வாங்கி நெய்து தாங்களே துணிகளை விற்றும் வருகின்றனர். அவர்களுடைய நிலைமை அவ்வளவு சௌகரியமாகச் சொல்லுவதற்கில்லையென்றாலும் கேவலமாகச் சொல்லுவதற்குமில்லை.

மூன்றாம்தர நெசவாளர்களின் நிலைமை மிகவும் கேவலமாகவே யிருக்கிறது. அவர்கள் துயர்ந்து வேலை செய்துவரவும் முடிகிறதில்லை; நூல் வியாபாரிகளிடமிருந்தும் துணி வியாபாரிகளிடமிருந்தும் கடன் வாங்காமல் காலங்கழிக்கவும் முடிகிறதில்லை. அவர்கள் மற்றவர்களிடம் கூலிக்காகவும் நெய்கிறார்கள்; வியாபாரிகளிடம் வாங்கிய கடனைத் தீர்க்கவும் நெய்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் கூலி மிகவும் சொற்பம். இப்படியாக முக்கால் வாசிப் பேர் கடனுடன் பட்டினியும் பசியுமாகக் காலங் கழிக்கிறார்கள். தரம் உயர உயர வியாபாரிகள் இலாபம் அதிகமாவதேயன்றி நெசவாளரின் கூலி அவ்வளவு அதிகமாவதில்லை.

எட்டு மணி நேரம் சாதாரணத் துணி நெய்தால் ஆறு முதல் எட்டணாக் கூலியே கிடைக்கிறது; உயர்ந்த தரம் நெய்பவர்களுக்கும் பன்னிரண்டு முதல் பதினைந்தணாக் கூலி தான் கிடைக்கும்; அப்படி ஆட்களுக்கு அதிகத் தேவையிருப்பதுமில்லை. நெசவாளரில் பெரும்பாலார் எழுதப்படிக்கத் தெரிந்திருப்பதில்லை. பழைய காலக் குருட்டு நம்பிக்கைகளை விடுகிறதுமில்லை. புது மாதிரியாக நெய்யவோ புதுத்தரங்கள் போடவோ விரும்புவதுமில்லை. பத்துப் பெயரோ அதற்கும் அதிகமாகவோ கூட்டுறவு சங்கமாகக் கூடித் தங்கள் நிலைமையை விருத்தி செய்துகொள்ளக்கூடும் என்பதும் அவர்களுக்கு அருத்தமாவதில்லை. வியாபாரிகளின் கட்டிலிருந்து தப்பவேண்டுமென்ற ஆசையும் அவர்களுக்கில்லை. இப்படியாக, அவர்களுடைய விளக்கமில்லாத தன்மையாலே வெகு நேரம் நெய்தும் வயிற்றுக்குப் போதிய கூலி கிடையாமல் சங்கடப்படுகின்றனர்.

நாட்டில் மழை தண்ணீரில்லாமல் சங்கடமேற்பட்டாலும், வெள்ள மெடுத்துச் சேதமேற்பட்டாலும் அவை கைத்தறி நெசவாளரைத்தான் முதலாவதாகப் பாதிக்கின்றன. அவர்கள் நெய்த துணியை விற்கமுடியாது போனாலும் தாமதப்பட்டாலும் வேறெங்கேனும் கூலி வேலை கிடையாதா வென்று நெசவையும் போட்டுவிட்டுக் கூலி வேலை தேடித்திரிகிறார்கள். அறுப்படிப்புக் காலங்களில் அதிகக் கூலி கிடைக்கு மென்றால், நெசவை நிறுத்திவிட்டும் கூலி வேலை பார்க்கப் போகிறார்கள்.

நெசவாளர்களுக்கு இருந்துவரும் சிரமங்கள்

1. முதலாவதாக, நெசவுக்கு வேண்டிய பருத்தி நூல் பட்டு நூல் கம்பளி நூல் சௌக்கியமாகப் போதுமான அளவு கிடைப்பதில்லை. பொதுவாக, இதற்கொரு காரணம் நெசவாளர்களிடம் காசு கொடுத்து வாங்கக் கையில் பணமிருப்பதில்லை. கடனாக வாங்கும் பொழுது வியாபாரி சொன்ன விலையே, அதிக விலையே கொடுக்கவேண்டிய தேற்படுகிறது. நூலுக்கு அதிக விலை கொடுத்து வாங்கியிருப்பதற்காகத் துணிக்கு அதிக விலை கிடைப்பதுமில்லை.

2. விசைத்தறி வந்து எவ்வளவோ காலமாகியும் அதிலும் எவ்வளவோ திருத்தங்கள் வந்தும் இன்னும் பழைய காலக் குழித் தறிகள் அனேக இடங்களிலிருக்கின்றன. அதில் அதிக அகலமும் நெய்ய முடிகிறதில்லை. ஊடைக்கு நூல் எறிய உடம்பையெல்லாம் வலது பக்கமும் இடது பக்கமும் சாய்க்கவும் வேண்டியிருக்கிறது. அதனால் அலுப்பும் அதிகமாகிறது.

3. சுருங்கிய நேரத்தில் சிரமத்தில் அதிக வேலை நன்றாகவும் திருத்தமாகவும் செய்வதற்குதவக்கூடிய கருவிகளை உபகரணங்களை உபயோகிப்பதில்லை. நாட்டு அச்சு இரண்டு மாதத்துக்கொரு தடவையேனும் புதுப்பிக்க வேண்டும். அஃதெல்லாம், அதிக வேலையும் சிரமமுமேயாகும்.

4. பசை போடுவது பாவாற்றுவது முதலிய வேலைகளெல்லாம் இன்னும் பழைய முறைப்படியே நடந்து வருகின்றன. அதனால் வேலை அட்டிப்படுகிறது. தெருக்களில் பாவாற்றுகிறபொழுது தெருத் தூசி யெல்லாம் பாவின் மீது வந்து படிந்து நிறத்தையும் சுத்தத்தையும் கெடுக்கிறது.

5. கைத் தறியால் நெய்யும் துணியைச் சரியாக மடித்துப் பாடம் செய்வதில்லை. ஆதலால், அது பார்க்க அழகாக, பகட்டாக இருப்பதில்லை. நெய்த சரக்கை உடனே கிராமங்களில் விற்பதற்குச் சௌகரியமொன்றுங் கிடையாது. தரகர்களிடம் வியாபாரிகளிடம்தான் விற்றாக வேண்டும். அவர்கள் தங்கள் இலாபத்தைக் கருதி நெசவாளர்களுக்கு அதிக மிச்சந் தருவதில்லை. அவர்கள் தருவதையும் தங்கள் சௌகரியம்போல நூலும் பணமுமாகவே தருவார்கள். காலத்துக் கேற்பத் தரங்களை மாற்றாமல் பழைய தரங்களையே நெய்து வருவதாலும் நல்ல விலை கிடைப்பதில்லை.

6. அவர்களுக்குப் பலபேர் சேர்ந்து தங்கள் தொழிலைத் திறமையாக, செம்மையாக, கௌரவமாகச் செய்துவரும் பழக்கமே யில்லையாதலால், அவர்கள் கூட்டாகச் சேர்ந்தும் தங்கள் நிலைமையை விருத்தி செய்வதற்கில்லை. அவர்களுக்காக ஏற்படுத்திய கூட்டுறவு சங்கங்களும் கட்டுப்பாடாகத் தங்கள் வேலையைச் செய்வதில்லை. நெய்த துணிகளை விற்றுத் தருவதில்லை; அவர்களுக்குப் போதிய பணம் கொடுப்பதில்லை. அவர்களிடத்திலே அவர்களுடைய தொழிலிலே, அனுதாபமுடையவர்களிருந்தால் அவர்களை ஒழுங்குக் குட்படுத்தியும் அவர்களுக்கு யோசனை சொல்லியும் திருத்திவரக்கூடும். அப்படிச் செய்பவருமில்லை.

7. அவர்களுக்கு நல்ல சாய நூல்களும் சாயம் போகாத பட்டு நூல்களும் அவர்களுடைய கிராமங்களிலேயே கிடைப்பதில்லை. பட்டினங்களுக்குப் போய்த்தான் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியதிருக்கிறது. சாயுஞ்

தோய்க்கவும் அவர்கள் படித்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் செய்யக்கூடிய உதவிகள்

1. நெசவாளர் சங்கங்களின் மூலமாகவும் கூட்டுறவு மளிகைகளின் மூலமாகவும் நெசவாளர்களுக்கு வேண்டிய நூல் முதலியனவற்றைச் சௌக்கியமாகவும் சௌகரியமாகவும் கொடுத்துவரலாம்.

2. விசைத்தறிகளை உபயோகிக்க அவர்களைத் தூண்டுவதினால் அவர்கள் 4 சதம் அதிகமாகவும் நெய்ய முடியும். ஆறடி அகலத்திற்கும் நெய்யலாம்.

3. நூதனக் கருவிகள் உபகரணங்களின் பிரயோசனத்தை அவர்களிருக்கும் ஊர்களிலேயே அவர்களைக் கூட்டிக் காண்பிக்கவேண்டும். அரசாங்க நெசவுப் பள்ளிகளில் அவர்களைத் திருத்தமான கருவிகளை உபயோகிக்குமாறு பழக்கவும் வேண்டும்.

4. புதுமாதிரியாகப் பசை போடவும் பாவாற்றவும் இவை போன்றன செய்யவும் அவர்களுக்கு அவர்களிருக்கு மிடங்களிலேயே செய்து காட்டவேண்டும். இவற்றை யெல்லாம் அவர்கள் அனுசரித்தால் அவர்களுடைய வேலை மழையாலும் வெய்யிலாலும் தடைபடவுமாட்டாது.

5. அரசாங்க நெசவுப் பள்ளிகளும் நெசவாளர் சங்கங்களு மிருக்கு மிடங்களில் குறித்த அளவுப்படி நல்லதரமாக நெய்துவரப் பழக்கவேண்டும். புதுப் புதுத் தரங்களும் அவர்களுக்குக் காட்டிவரவேண்டும். வியாபாரிகளிடமும் கடைகளிலும் அவர்களுடைய சரக்கைச் சீக்கிரம் விற்பதற்கும் உதவ வேண்டும்.

6. கூட்டுறவு சங்கங்களைச் சிறிதாக ஆரம்பித்து நெசவாளர்களுடைய துணிகளை விற்கவும் அவர்களுக்கு வேண்டியவற்றை வாங்கித்தரவும் வேண்டும். அந்தச் சங்கங்களைக் கட்டுப்பாடுடன் வேலைசெய்துவரச் செய்யவும் வேண்டும். சரியான மேற்பார்வையும் இருந்து வரவேண்டும்.

7. நெசவாளர்களுக்குச் சாயம் தோய்ப்பதெப்படி யென்றும் காட்டிவரவேண்டும்.

நெசவாளர்கள் எளிதாக விற்கக்கூடியதும் ஆலைப்போட்டி வரக்கூடாததுமான துணிகளையே நெய்யவேண்டும்.

கைத்தறிகளில் அனேகமாகத் தாழ்ந்த நம்பர் நூல்களிலேயே நெய்கிறார்கள். அந்தத் துணிகளும், ஆலைத் துணிகள் போலிருப்பதில்லை. ஆகையால், கைத்தறித் துணிகளை ஆலைத் துணிகளோடு ஒப்பிடக்கூடிய அவசரமே நேருவதில்லை.

ஆலைகள் அகலக்கரைகள் சரிகைப்பட்டைகள் போட்டும் நல்ல வேலைப்பாடுடன் நெய்ய ஆரம்பித்திருக்கின்றன. தாழ்ந்த நம்பர் நூல்களிலும் சிலைகள் நெய்கின்றன. ஆலைப் போட்டி வராத புதுப்புது தரத் துணிகளையே கைத்தறியில் நெய்துவரவேண்டும். ஆலைகளில் போடுகிற தரமே நெசவாளர்களும் நெய்கிறார்களென்றால், நெசவாளர்களின் துணி விலையாகாதும் நின்றுவிடும்.

(விவசாயிகளும் நெசவை உப தொழிலாகச் செய்துவருவதற்கு, என்ன ஏற்பாடுகள் செய்யலாமென்று இந்த அறிக்கையின் முடிவில் சொல்லப் படுகிறது. உழவில் குவிந்திருப்பவர்களில் சிலரேனும் வேறு தொழில் தேடவேண்டிய தவசியமென்றாலும், அவர்கள் நெசவில் சேர்வது அங்கேயுமிகுந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை வளரச் செய்யும். ப-ர்.)

மெய் பேசிக் கெட்டாருமில்லை, பொய் பேசி வாழ்ந்தாருமில்லை; மெய் மனதைத் தூய்மைப் படுத்துவதுடன் உரம் பெறவும் செய்கிறது. பொய் மனதை அழுக்குப் படுத்துவதுடன் உன் பலவீனத்தையும் காட்டுகிறது. ஆதலால், மெலிவு நேரினும் மெய்யைக் கைவிடாதே.

குழந்தையைப் பேணிவளர்க்கும் முறை

குழந்தைக்கு மூன்று மாதத்திற்குள்ளாக அம்மை குத்திக்கொள்ளவேண்டும்.

குழந்தையைக் கிடத்துகிற தொட்டில் கட்டில்களைச் சுற்றிக் கொசுவலை கட்டவேண்டும். அதன் முகத்தைத் துணியால் மூடக்கூடாது.

அதனைத் தினந்தோறும் குளிப்பாட்டவேண்டும். மலசலம் பட்ட பாகங்களை நன்றாகக் கழுவவேண்டும். அதற்கு அழுக்குத் துணிகளைப் போடக்கூடாது. அதனை வெறுந் தரையில் வைக்கக்கூடாது.

அதற்கு வாயிலே ஒன்றையும் சப்பக் கொடுக்கக்கூடாது. ஆனால் பல் முளைக்கிற போது, ஒரு கரண்டியைக் கொடுக்கவேண்டும். அந்தக் கரண்டியை அடிக்கடி கொதிநீரிலே போட்டுச் சுத்தம்பண்ணவேண்டும்.

முதல் மூன்று மாதங்களுக்கு இரண்டு மணிக்கு ஒருதரம்தான் பால் கொடுக்கவேண்டும். இராத்திரி பத்து மணிக்குப் பிறகு கொடுக்கக்கூடாது. நாலாம் மாதத்திலிருந்து மூன்றுமணிக்கொருதரம் கொடுக்கவேண்டும்; இராத்திரியில் கொடுக்கவே கூடாது. இடையில் குழந்தை அழுதால், ஏற்கனவே காய்ச்சி வைத்துள்ள சலத்தில் கொஞ்சத்தை எடுத்து, இலேசாகச் சூடாக்கிக் கொடுக்கலாம்.

ஏழெட்டு மாதம் வரையிலும் பால்ஒன்றுதான் கொடுக்கவேண்டும். சோறு முதலியன கொடுக்கக்கூடாது. ஆனால் பழச்சாறு கொடுக்கலாம். ஆரஞ்சு ரசம் நல்லது. பழத்தைப் பிழிவதற்கு முந்தி அதைக் கொஞ்ச நேரம் கொதிநீரிலே போட்டு எடுக்கவேண்டும். பால் கொடுத்த உடனேயே சாறும் கொடுக்கக்கூடாது; குறைந்தது ஒரு மணி நேரமாவது செல்லவேண்டும்.

குழந்தைக்கேற்ற உணவு தாய்ப் பால் தான். அது இல்லாவிட்டால், ஆட்டுப்பால் பசுவின் பால்களைக் கொடுக்கலாம். பாலைக் காய்ச்சி, ஒரு சுத்தமான புட்டியில் வார்த்து, ஒரு குளிர்ந்த இடத்தில் வைத்துக்கொண்டு, இரண்டு மணிக்கொருதரம் ஒன்று ஒன்றரை அவுணம் விகிதம் கொடுக்கவேண்டும். வெய்யிற் காலத்திலே, சாயங்காலத்திற்கு உபயோகிக்கும் பாலை மத்தியானத்தில் நன்றாக வெதுப்பிக்கொள்ளவேண்டும். மூன்று நான்கு வாரக் குழந்தைக்கு இரண்டு மணிக்கொருதரம் இரண்டு அவுணம் பால் கொடுக்கவேண்டும். மூன்றாம் மாதத்திலே நாளொன்றுக்கு முப்பது அவுணம் பால் கொடுக்கவேண்டும். நாலாம், ஐந்தாம், ஆறும் மாதங்களிலே ஒவ்வொரு தடவைக்கும் ஐந்து முதல் ஏழு அவுணமாக ஏழு தடவை கொடுக்கவேண்டும்.

மலச் சிக்கலுக்கு ஏராளமாகத் தண்ணீரையும் ஆரஞ்சு ரசத்தையும் கொடுக்கவேண்டும். ஒரு கட்டி சோப்புத் துண்டை எடுத்து, அதைப் பென்சில் நுனி போலச் செதுக்க வேண்டும். செதுக்கின துண்டின் நுனி பென்சில் பருமனுள்ளதாகவும், அதன் அடி அரை அங்குலக் குறுக்களவுள்ளதாகவும், நீளம் இரண்டங்குலமானதாகவும் இருக்கவேண்டும். பின்பு அதன் மேலே கொஞ்சம் வாசலீனைப் பூசிக் குழந்தையின் ஆசனத் துவாரத்தினுள்ளே செலுத்தவேண்டும். பாதி நீளம் உள்ளே போனாலும் போதும். கொஞ்ச நேரம் கழித்து எடுத்துவிட வேண்டும். மலம் கழிவதற்கு இது ஓர் அனுபவமான முறை.

தாய் தன் உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அடிக்கடி முலைக் காம்புகளைக் கழுவ வேண்டும். தினம் அரைச் சேர் பால் குடிக்கவேண்டும். கடுமையான உழைப்புச் செய்யக்கூடாது. கோபம் பயம் கவலை இவை ஒன்றும் ஆகா. பேதிக்கு மருந்து சாப்பிட்டால், இது பாலிலே கலந்து,

பிள்ளைக்கும் பேதி காணச் செய்யும். ஆகையால், பேதி மருந்து சாப்பிடுவது உசிதமல்ல. அப்படியே, வெற்றிலை புகையிலை தேயிலை காப்பி முதலியவற்றையும் உபயோகிக்கக் கூடாது. அவற்றால் தாய்க்கும் குழந்தைக்கும் மிகுந்த கெடுதி உண்டாகிறது.

நல்வழி.

(குழந்தைகள் நம் குடும்பச் செல்வங்கள், நம் மினச் செல்வங்கள், நம் நாட்டின் செல்வங்கள். அவர்களைச் சரியாகக் கவனித்துத் திருத்தமாக வளர்த்து வந்தால் மட்டும் நம் குடும்பமும் இனமும் நாடும்; திருந்தும் முன்னேறும். இப்படியாக, அவர்களைப் பேணித் திருத்தி வளர்க்க வேண்டிய முறைகளை, நம் வாசகர்களுக்கு ஞாபகப்படுத்தி அவற்றையனுசரித்து நடந்துவரும்படி தூண்டுவதற்காகவே மீண்டும் மீண்டும் வெவ்வேறு நோக்கில் பல கட்டுரைகளை வெளியிட்டு வருகிறோம். ப-ர்.)

ஆ. நாட்டுவைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள்

1. முள்ளங்கி: முள்ளங்கியின் சாற்றையோ அல்லது முள்ளங்கியையோ உபயோகிப்பதால் நீர்ப்பையிலுள்ள நீர் பிரியும்.

அது குருதியை விருத்தி செய்யும். குளிர்ச்சியை உண்டுபண்ணும்.

மது மேகம் (நீரிழிவு) பிணியாளிகளுக்கு முள்ளங்கி மிகவும் உபயோகமானது.

முள்ளங்கியை அதிகமாக உபயோகப்படுத்தும் செங்கற்பட்டு சில்லாவிலுள்ள காஞ்சிபுரத்தில் மது மேக வியாதி அதிகம் கிடையாது.

குடல் வாயு என்னும் நோயையும் போக்கும்படியான நன்மை வாய்ந்தது.

மேக சுரங்களுக்குச் சிவப்பு முள்ளங்கி நன்மையைச் செய்யும்.

கீரையை அதிகமாக உபயோகிப்பது கிடையாது. ஆனல், கீரையில் கல்லீரல் நோயைப் போக்கி, குலைக்குப் பலந்தரும் குணம் உள்ளது.

நல்வழி. பண்டிதர் மாசிலாமணி.

(கிராமதூதன் இரண்டாம் மலர் 334-335ம் பக்கங்களையும் Arogyamargam இரண்டாம் மலர் 76ம் பக்கத்தையும் பார்க்க. ப-ர்.)

2. சாதாரணமாகப் பழங்களும் காய்கறிகளும் உலர உலர அவற்றிலுள்ள உயிர்ச் சத்துக்களும் குறைகின்றன. உலர வைப்பதாலும் வேக வைப்பதாலும் சி உயிர்ச்சத்து வெகு எளிதாகவும் கெட்டுப் போகிறது. நெல்லிக்காய் மட்டும் காயவைப்பதாலும் அவ்வளவாகக் கெட்டுப் போவதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அதில் இளக்கச் சத்து (Tannin) இருக்கிறது; அஃது உயிர்ச்சத்தைப் பாதுகாத்துக் கொள்ளுகிறது. அதனுடைய சாறு காடி நிறைந்ததாக இருக்கிறது; அது காரணமாகவும் சி உயிர்ச்சத்தின் சேதம் ஒருவாறாகக் குறைகிறது. கொஞ்சமும் குறையாமலிருக்குமென்று சொல்ல முடியாது. சீக்கிரமாக உலர்ந்தால், அதிகமாகக் குறையாதென்று திட்டமாகச் சொல்லலாம். சரியான விதமாக உலர வைத்தால் ஒரு சிறெடை நெல்லிக்காயிலும் ஒரு நாளைக்கு வேண்டிய உயிர்ச் சத்து அமைந்திருக்கும். வெப்பமான இடத்திலே நெல்லிக்காய்ப் பொடியைக் காற்றுட வைத்துவிட்டால், அதிலுள்ள சி. உயிர்ச்சத்துக் குறையவே செய்யும்; என்றாலும், பல மாதங்களான பிறகும் சி. உயிர்ச் சத்து அதிகமாகக் கெடாமல் போதிய அளவு இருந்துதான் வருகிறது.

Indian Farming.

3. சில உணவுக் குறிப்புக்கள்: பாலும் சருக்கரையும் சேர்ந்த பண்டங்கள் உடம்புக்கு நல்லதல்ல. சருக்கரையானது உறுப்புக்களை

அடைப்புக்கொள்ளச் செய்து, ஈரலில் அசௌக்கியத்தை உண்டாக்கும்.

கஞ்சியுணவை (Liquid foods) அள வுக்கு மிஞ்சிச் சாப்பிடக் கூடாது. (நீராகாரம் காடிப்பான மாதலால், நல்லதல்ல. அதன் கேடில்லாமல், அதன் குணத்தைத் தண்ணீர்ப் பானமே தரும். ப-ர்.) கட்டியான உணவுப் பொருள்கள் அரைபட வேண்டு மாகையால் அவை உமிழ் நீரை அதிகமாய் ஊறும்படி செய்து செரிக்கவும் செய்யும்.

அதிகச் சூடான பதார்த்தங்களைச் சாப் பிடக்கூடாது; ஏனெனில், அவற்றால் வயிறு மெலிவடைந்து போகிறது. சில்லிட்டுப்போன உணவையும் புசிக்கக்கூடாது; ஏனெனில் செரிப்பு வேலை ஆரம்பிக்குமுன், வயிற்றுக் குள்ளிருக்கும் குளிர்ந்த உணவைச் சூடாக்கத் தேகத்திலிருக்கும் சத்திகளெல்லாம் இழுக்கப் பட்டுப்போம். உறைநீர் (Ice) கலந்த பானங் கள் கெடுதலானவை. ஆகாரம் கொஞ்சம் சூடாயிருக்கும்போது சாப்பிடுவதுதான் நலம்.

கொழுப்புள்ள பதார்த்தங்களும் பொரித்த பண்டங்களும் எளிதில் செரிக்கக்கூடியவை யல்ல; ஏனெனில், கொழுப்பு மூடிய பதார்த் தங்கள் சிறு குடலுக்குட் செல்லும் வரை செரிப்பு நீர்கள் அவற்றைச் செரிக்க முடியாது.

ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும்.

---

9. கிராம முன்னேற்றம்: தேச முன்னேற்றம்

கிராமச் சீரமைப்பு

H. S. M. Ishaque, Director of Rural Reconstruction, Bengal.

Bulletin No. I

கிராமச் சீரமைப்பென்றால், என்ன வென்றுதான் நாம் அதனைத்தெளிவாகத்தெரிந் துகொள்ளுவது? இங்குமங்கும் காட்டிலுள்ள முள்ளுமொட்டையும் தண்ணீரிலுள்ள குளி தாமரையையும் ஏதோ நினைத்த நேரம் அரை யும் குறையுமாகக் காலிசெய்வதா? (வங்காளத் தில் எங்கு பார்த்தாலும் தண்ணீரில் குளிதாம ரை அளவுக்குமிஞ்சிப் படர்ந்திருக்கும். ப—ர்.) சாலைகளையும் வடிகால்களையும் துப்பரவு செய் வதா? பள்ளிகளையும் மருத்துவ சாலைகளையும் இவை போன்றனவற்றையும் நம் முயற்சியினு லோ மற்றப்படியோ தாபிப்பதா? அல்லது இவையெல்லாம் சேர்ந்த மொத்தத்துக்கும் நிரம்பிய அதிக மானதொன்றா? அல்லது சமு கப் புத்துணர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட நிலை மையா? அல்லது கிராமாந்தர சனங்களின் மனப் போக்கையும் வாழ்க்கையைப்பற்றிய அவர்கள் நோக்கத்தையும் பூராவாகமாற்று கின்ற மார்க்க மொன்றா?

இதனைப்பற்றி, சாதாரணமாக நிரம்பக் குழம்பிய கருத்தே யிருந்து வருகிறது. ஆனால் காரணத்தையே காரியமாகக் கருதிடாமல், உண்மை இன்னதுதானென்று ஆழ்ந்தறிய விரும்புகிறவருக்கு, மறுமொழியும் தெளிவாக அமையும். கிராமச்சீரமைப்பென்றால், கிராமாந் தர சனங்களின் மன அமைப்பை மனப் போக்கைச் சீராக மாற்றி யமைப்பதேயாகும். இந்த அடிப்படையான சீர்திருத்தம் செய்து கொள்ளாமல், கிராமத்தில் செய்கிற குறிப் பிட்ட வேலையெதுவும் நீடித்து நடக்கக்கூடிய தில்லை. நாளாக ஆக அதுதானே நின்றுபோம்.

ஆனால், இந்த இயக்கம் மனப்போக்கை மாற்றுவதோடு நின்றுவிடக்கூடாது. அதற்கு மேலும் செய்யவேண்டியது நிரம்ப இருக்கிறது. குடும்பங்களை நல்ல குடும்பங்க ளாக்குவதும் கிராமங்களை நல்ல கிராமங்களாக்குவதும்-ஏன், இவற்றில் அடங்கினயாவும் ஆக்கமாகச் செய்து தீரவேண்டியனவற்றை யெல்லாம் சரியாகச்

செய்துவரச் சனங்களைத்தூண்டி வழிகாட்டி வர வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு மிருக்கிறது. என்றாலும், மனத்தையொட்டிய மாறுதலே முக்கியம். அது மற்றவற்றிற் கெல்லாம் முந்தியே ஆகவும் வேண்டும்.

இப்பொழுது கிராமாந்தர மனப்போக்கைச் செலுத்திக்கொண்டிருப்பதுதான் எது? உண்மையைச் சொல்லுவதென்றால், எதுவுமில்லை. சனங்கள் விருத்தியாக வேண்டுமென்ற ஆசையையிழந்து போயிருக்கின்றனர். (விளக்கமே யில்லாது போய்விட்டனர். ப—ர்) ஆகவே, கிராமச் சீரமைப்பின் முக்கியாம்சமெல்லாம், அந்த ஆசையைப் புதுப்பிப்பதும் அவர்கள் தனித்தனியாக மட்டுமல்ல பலரோடு சேர்ந்து கூட்டாகவும் விருத்தியாகி வருவதற்கான வழிகளில் அவர்களைத் தூண்டிச்செலுத்துவதுமே யாகும். கிராமச்சமுகம் அல்லது அமைப்பு-ஏன், அதனைக் கிராமாந்தர வங்காளம் என்றே சொல்லுவோமே—அந்த அமைப்புத் தனக்குத்தோன்றியிருக்கும் பலவேறு பிணிகளையும் தானாகக் குணமாக்கிக்கொள்ளத் தெரிந்து நல்ல சுகத்தோடு திரும்ப வெளிவரவேண்டுமென்றுதான் நாம் விரும்புகிறோம். ஆகையால், கிராமாந்தரத்திலிருக்கும் சனங்கள் ஆத்மீகமாகப் புத்துயிர் பெறவேண்டும். அவர்களுடைய கிராமவாழ்க்கையிலுள்ள பலவேறு சம்பந்தங்களும் இந்த புத்துயிர்ப்பின் பயனாகச் சிறக்க வேண்டும்; சிறந்த பொருளாதார விருத்தியையும் அவர்கள் அடைய வேண்டுமென்றே நாம் அந்தச் சனங்களுக்குச் சொல்லுகிறோம்.

இவற்றையே வேறுவகையாகச் சொல்லுவதென்றால், கிராமச்சீரமைப்பு சனங்களுக்கு அவர்களுடைய தற்கால நிலைமையோடு போராடுவதற்கான பலத்தைத் தரக்கூடிய ஊக்கத்தை யுண்டுபண்ணி, அவர்களுடைய பொருட்சாதனங்களையும் மறைந்திருக்கும் சத்தியையும் வெளிப்படுத்த வேண்டும். சாகும் தறுவாயிலிருக்கும் அந்தச்சனங்களுக்கு உறுதியாகிய கதிரை வீசும் தீப்பொறியும், புதிய தோற்றத்தைக்காட்டிப் புதியஆசையையும் உற்சாகத்தையும் சமுகங்களின் சனங்களின் வாழ்க்கையில் புகுத்தும் நற்செய்தியும் ஆகும் அந்தக் கிராமச்சீரமைப்பு கலங்காது; ஆனால், பிராணு பத்தாக இருக்கும் சாதாரண சனங்களின் அமைதியைக் கலக்குவதற்கு முதலாவதாகவும் வெகு அவசரமாகவும் வேண்டியிருக்கும் போட்டியையும் போராட்டத்தையும், சுயநம்பிக்கையும் சுயமரியாதையையும் விளைவிக்கிற அப் புதிய ஆன்மசத்தியே கிராமச்சீரமைப்பாகும்.

"நவீன சாத்திரமும் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளும் நல்ல அரசாங்கமும் தனக்களிக்கும் சந்தர்ப்பங்களைத்தனக்கு இலாபகரமாகப் பயன்படுத்திக் கொள்ளவும், போதிய சுகமும் அறிவும் அவற்றாலாகிய திறமையும், தற்கால வாழ்க்கை நிலைமையை மேம்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற ஆசையும் கூடியவனாக சமுசாரி இருந்தாலொழிய, உழவில் போதிய திருத்தம் அமையாதென்பதை எங்கள் அறிக்கை பூராவிலும் தெளிவாக்கிவர முயற்சித்திருக்கிறோம். விவசாயத்தைச் செழிக்கச் செய்வதற்கான பல காரியங்களில் வெகுவெகு முக்கியமானது, சமுசாரியினுடைய ஆசையேயாகும்" என்று மன்னர் விவசாய விசாரணைக் கழகமும் எச்சரித்திருக்கிறது.

கௌரவமிக்க திரு. சூராவார்டியும் கிராமச்சீரமைப்பு இயக்கத்தின் அடிப்படையான கருத்துக்களை வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார். கால்வாய்கள் வெட்டுவதும் வடிகால்கள் ஒதுக்குவதும் சாலைகளைத் திருத்துவதும் காடுகளை அழிப்பதும் கிடங்குகளை நிரப்புவதும் குளிதாமரையை யொழிப்பதுமே கிராமச் சீரமைப்பென்று சாதாரண சனங்கள் நினைக்கின்றனர். இவை யெல்லாமும் இவற்றையும் கடந்த அனேகமுமாகும் கிராமச் சீரமைப்பு. அஃது, இவற்றில் மட்டும் அடங்கியதல்ல. இவை கிராமச் சீரமைப்பினால் நிகழ்வனவேயன்றி, இவையும் கிராமச் சீரமைப்பாக மாட்டா. கிராமச் சீரமைப்பென்றால், ஒரு பெரிய மனக்கிளர்ச்சியாக, கிராமாந்

தர மனதின் ஒரு முயற்சியாக நான் கருதுகிறேன். அந்த இயக்கத்தை இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டு மென்றால், நன்றாக வாழ்வதற்கு இஃது ஓர் தூண்டு கோலாக, தன்னுடைய வாழ்வு தன்னுடைய கையிலேயே இருக்கிறதென்பதை உணரச் செய்வதாக, தன்னுடைய நிலைமையை விருத்தி செய்து கொள்ளுவதற்குத் தன்னிடமே போதிய சக்தி யிருக்கிறதென்பதை அறிவுறுத்துவதென்றும் சொல்லலாம். அதன் நோக்கம், வெகு காலமாகத் தூக்கத்திலும் மயக்கத்திலும் இருந்துவரும் கிராமவாசியைத் தட்டியெழுப்பி அவனுக்கோர் புதிய நம்பிக்கையையும் புதிய வாழ்க்கையையும் தந்து அவனைத் தன்னம்பிக்கை யுடையவனாகவும், தன் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடியவனாகவும், தானாகவே நன்றாக வாழக் கூடியவனாகவும் செய்வதாகும். கிராமச் சீரமைப்பு, அவனுடைய ஆசையைப் பெருக்கி புதுப் புதுக் கருத்துக்களை ஏற்கச்செய்து சதா தன் அறிவையும் நிலைமையையும் விருத்தி செய்து வரவேண்டுமென்ற பேரவாவையும் எழுப்பிவரும். முன் யோசனையாகத் திட்டஞ் செய்து நடத்திவரும் கிராமச் சீரமைப்பு வேலையானது, நம்முடைய சனங்களுக்கு மிச்சத்தைத் தரக்கூடுமென்றும், அது சங்கடப் பட்டுக்கொண்டும் ஏழைகளாகவு மிருக்கும் நம்மவர்களுக்கு நாம் செய்யக்கூடிய பெரிய ஊழியமென்றும் நான் கருதுகிறேன். உண்மையில், அஃது அவர்களையே தெய்வமாகக் கொண்டாடுவதும் ஆகும்.

இவர்களெல்லாம் சொல்லிய வெகு அருமையான கருத்துக்களும் உங்கள் மனதைத் திருப்பமுடிய வில்லையென்று போய்விடாதபடி இன்னுங் கொஞ்சம் அழுத்தமாக அனுபவத்தை யொட்டிய ஓரே ஒரு உதாரணமும் உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மேடுபள்ளமில்லாத நல்ல சுகமான புன்செய் நிலத்தில் கிராமவாசிகள் சிலர் குடியேறுகிறார்களென்று வைத்துக்கொள்ளுவோம். அவற்றைச் சில ஆண்டுகள் கழித்துப் பார்ப்போம். அங்கே நாம் என்ன பார்க்கக்கூடுமென்று நினைக்கிறீர்கள்? ஓர் ஒழுங்குமில்லாமல் தாறுமாறாகக் கட்டிய குடிசைகள், வளைந்து வளைந்து போகிற சந்துகள், எங்கும் குப்பையும் கூளமும், இவற்றிற்கெல்லாம் மேலாக அந்த இடமெல்லாம் நூற்றுக்கணக்கான குண்டுகளும் குழிகளுமே பார்ப்போம். ஒரு கிராமம் எவ்வளவு அசுத்தமாக இருக்கக்கூடுமோ அவ்வளவு அசுத்தமாகவே அந்தக் கிராமமிருக்கும். அது முறைக்காய்ச்சலுக்கும் அதனோடு மற்றும் பல பிணிகளுக்கும் உறைவிடமாகவு மிருக்கும். ஒவ்வொருவரும் தன் தன் போக்குப் போலவே காரியங்களைச் செய்திருப்பார்கள். அப்படிச் செய்ததையும் புத்திசாலித்தனமாகச்செய்திருக்கமாட்டார்கள். இப்படிக் குண்டுகளும் குழிகளும் தோண்டியதால், தங்களையே புதைப்பதற்கும் குழிகள் தோண்டியவர்களாவார்கள். அந்தக் கிராமத்தார் எல்லாருமாகச் சேர்ந்து ஊர்ப் பொதுக்குளம் என்று ஓரிடத்தை ஒதுக்கிவைக்கக்கூடாதா? அவர்களுக்கு வேண்டிய மண்ணெல்லாம் அந்த இடத்திலேயே வந்து எடுத்துக்கொள்ளக் கூடாதா? வாடகைக்கோ கிரயத்திற்கோ ஒரு குழிதோண்டும் எந்திரத்தை வாங்கிக் குழிக் கக்கூசுகள் கட்டிக்கொள்ளக் கூடாதா? இஃதெல்லாம் அதிகச் செலவு பிடிக்குமென்று நினைக்கிறீர்கள்? இல்லை, அவர்களுக்கு இந்த அறிவில்லை. ஒரு காரியத்தை நாலு பெயருடன் கலந்து சேர்ந்து செய்யவேண்டுமென்ற நினைப்பில்லை. நன்றாக வாழவேண்டுமென்ற ஆசைகூட இல்லை. இதற்கு மேலும் பணமில்லாத குறையால்தான் கிராமங்கள் இப்படியிருக்கிறதென்று நினைக்கமாட்டீர்கள். அதற்குமதிகமாக, நல்ல நினைப்பே உணர்ச்சியே யில்லாத குறைதான், நம்முடைய சனங்கள் பிராணபத்தான நிலைமையிலிருந்து வருவதற்குக் காரணம். கிராமச் சீரமைப்பு இயக்கம் இந்தக் குறைகளை யெல்லாம் போக்குவதற்காகவே வந்திருக்கிறது.

சுருங்கச் சொல்லில், இந்த இயக்கம் சாதாரண சனங்களுக்கு ஒரு புத்துணர்ச்சியைத் தருவதற்காகவும், தனித்தும் கூட்டாகவும் விருத்தியடைய வேண்டுமென்ற ஒரு புதிய ஆசையைக் கிளப்புவதற்காகவும், சுயமரியாதை சுயநம்பிக்கை சுயஉதவி இவற்றை அவர்களிடையே வளர்ப்பதற்காகவும், அவர்கள் தாமாகவும் கூட்டாகவும் நன்மைக்கான முயற்சிகளிலீடுபட அவர்களுக்குக் கற்பிப்பதற்காகவும், அதற்கான அமைப்புகளில் சேரவும் ஒரு நல்ல குடியானவன் இப்படியெல்லாம் இருக்கவேண்டுமென்ற உணர்ச்சியை யடையவும் வீடுகளையும் கிராமங்களையும் நன்ருக அமைத்து அவற்றின் மூலம் அவர்களுடைய உடல் நலமும் சீலமும் பொருளாதார நிலைமையும் சமூக உணர்ச்சியும் விருத்தியாகவுமே ஏற்பட்டதாகும். அதாவது சனங்களின் போக்கும் நோக்கும், நல்ல விதமாக மாறவேண்டுமென்பதே இந்த இயக்கத்தின் முக்கியாம்சமான கொள்கையும் உண்மையான அடிப்படையுமாகும். அவற்றின் மேலாகவே நாம் கட்டடம் கட்டவேண்டியவர்களாக இருக்கிறேம். ஆனல், அந்தக் கட்டடத்தையும் நாம் கட்டியாக வேண்டும். அந்தக் கட்டிடத்தை எப்படிக் கட்டுவது, அதனுடைய முக்கியமான பார்வை எப்படி யிருக்கவேண்டுமென்பதையெல்லாம் நாம் கவனித்துக்கொள்ளவும் வேண்டும்.

நல்ல வேளையாக, நமக்கு இது நன்ருகத் தெரியும். நாம் சாதாரண சனங்களின் பொருளாதார நிலைமையை உடம்பின் திடத்தை, கல்வி யறிவை விருத்தி செய்யவும் பொதுவாக அவர்கள் வாழ்க்கைத் தரத்தையே உயர்த்தவும் விரும்புகிறேம். செய்ய வேண்டிய வேலைகள் பலவாகவும் வெவ்வேறு மாதிரியானவையாகவும் இருப்பினும், அவை ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தமுடையனவாகவே யிருக்கின்றன. சனங்களின் உடல் திடத்தையும் சுகத்தையும் விருத்தி செய்யாதபடி, அவர்களுடைய பொருளாதார நிலைமையை விருத்தி செய்துகொள்ள முடியாது. அதுபோலவே, அவர்களுடைய பொருளாதார நிலைமையையும் உணவின் சத்தையும் விருத்தி செய்யாதபடி அவர்களுடைய சுகத்தைவிருத்திசெய்துகொள்ள முடியாது. சாதாரண சனங்களின் அறிவை விருத்தி செய்யாதபடி, இவற்றிலெதையுமே விருத்தி செய்துகொள்ள முடியாது. ஆகையால், அனேகர் சொல்லுகிற மாதிரி ஒன்றன் பின் ஒன்ருக இந்த வேலைகளைச் செய்வதென்பதாக இல்லாமல், எல்லா வேலைகளையும் ஒருமிக்கச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். அதிகப் பணம், அதிகச் சுகம், அதிகக் கல்வி இவை மூன்றையுமே சீரமைப்பு வேலைகளில் முக்கியமாக நாம் கருதுகிறேம். ஆகவே இவை மூன்றையும் ஒருமிக்க விருத்தி செய்ய ஆரம்பிப்போம்.

இந்த வேலைகள் செய்து முடிக்க வேண்டியவர்களைக் கூட்டி அவர்களைக் கலந்து ஆலோசித்துத் திட்டமாக நெடுகலும் நடந்துவரக் கூடிய அமைப்பையும் ஏற்படுத்தி மற்றும் அவசியமான ஏற்பாடுகளையும் செய்துகொள்ளாமல், இந்த மகத்தான வேலைகளை ஆரம்பிக்க முடியாது. ஒற்றுமையே பலம். கிராமவாசி ஏழையாக இருக்கலாம். தனிப்பட ஒன்றும் செய்துகொள்ள முடியாதிருக்கலாம்; ஆனல் பிறரோடு சேரும்பொழுது, அப்படிச்சொல்லிவிடமுடியாது. இதனைக் கிராமவாசி உணரவேண்டும். தன்னிடமுள்ள பொருட்சாதனங்கள் சொற்பமாகவேயிருப்பினும், அவற்றைச் சிதறவிடாது சேர்க்க வேண்டும். சமுத்திரமே பல துளிகள் சேர்ந்ததுதானே! அமைப்புத் தான் நாம் கோரும் நிலைமையை யடைவதற்குத் திறவுகோல் உரைகல் ஆகும். அதுவே, ஒரு நல்ல படிப்பினையென்பது மட்டுமல்ல. அதனைச் செய்து முடித்துக்கொள்ளாதபடி, நம்முடைய வேலைகளையே நாம் ஆரம்பிக்க முடியாது. அமைப்பின்றி, நாம் தனி மனிதர்களையும் நம் வேலைகளில் கவியச்செய்ய முடியாது. ஆகையால், நல்ல அமைப்பு, இன்னும் நல்ல

ஆரம்பமென்பதே நம்முடைய குறிப்பாக இருக்கவேண்டும்.

கிராமவாசிக்கும் அவனுடைய நெருங்கிய சுற்றுப்புறம் வீடு முதலியவற்றிற்கும் அடுத்தபடியாகக் கிராமச் சீரமைப்புத் திட்டத்தில் வெகு முக்கியமாக இருப்பது அந்தக் கிராமமே யாகும். கிராமவாசியின் மன எழுச்சியும், வெளிநோக்கும் அனேகமாக அவனுடைய கிராமத்தளவிலேயே இருக்கக்கூடும். அதிலேயே அவன் இருந்து வருகிறன், வாழ்கிறன், திரிகிறன். அவனுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்திலும் அவனே உறுத்தி அவனுக்கு உண்மையாகவும் இருந்துவருவது அந்தக் கிராமத்தைக் காட்டிலும் வேறொரு தாபனமுமில்லை. இப்படியாக, நியாயப் படிக்கும் இயற்கையாகவும் அதுவே வேறு எதைக் காட்டிலும் அவன் கவனத்தை முன்னதாகக் கவருகிறது. ஆகையால், அந்தக் கிராமத்திற்கெனவே தனித்த ஒரு சீரமைப்புச் சங்கத்தைத் தாபிக்க வேண்டும். அந்தச் சங்கம் ஆரம்பத்தில் திறமையாக வேலை செய்யினும் செய்யலாம், செய்யாது போயினும் போகலாம். என்றாலும், அந்தச் சங்கத்தை ஆரம் பித்துத் தீரவேண்டும்; அதனைத் தாமதிக்கக் கூடாது. முன் சொன்னது போலவே, அதுவே ஒரு படிப்பினையாக இருக்கும்; சமுகத்திட்டத்தில் ஒரு அவசியமான படியாகவும், நாள் ஏற ஏற விருத்தியாவதற்கு வெகு அவசியமான ஒரு படியாகவும் அது இருக்கும். அதன் அங்கத்தினர்கள் புது வேகத்தில் ஊற ஊற அந்தச் சங்கமும் நாளுக்கு நாள் அதிகத் திறமையாக வேலை செய்து வரும்.

ஆனல், இந்த ஆரம்ப வேலைகளை யெல்லாம் செய்யவும் திட்டம் போடவும் முதலாவதாக யார்தான் தொடங்குவது? அரசாங்க அதிகாரிகளே அவற்றைச் செய்தால் போதுமா? இல்லை, அநேகர் இதில் கலந்துகொள்ளவேண்டும். அந்தக் கிராமத்திலிருக்கிற இனந்தெரிந்தவர்கள் யோசனை சொல்லக்கூடியவர்கள் அனைவரும் சாதி சமயபேதமின்றிக் கலந்துகொள்ளவேண்டும். நமக்கோ பணம் நிரம்ப வேண்டும். நம்மிடமிருக்கும் பணமோ மிகவும் சொற்பம். அரசாங்க உதவி மட்டும் போதாது. எளிய சனங்களின் அரசாங்கம் பணக்கார அரசாங்கமாக இருக்கமுடியாது. அடிப் படையின் பலத்தைப் பொறுத்ததாகத் தானே மேற் கட்டடமுமிருக்கும்? தரையிலிருந்து தனக்கு எவ்வளவு சத்து எடுத்துக்கொள்ளமுடியுமோ, அதற்குத் தக்கதாகத்தானே ஒரு செடி விருத்தியாக வளரமுடியும்? மிகச் சிறந்த செடியும் தரையில் சத்தில்லை யென்றல், எப்படி நிரம்பப் பூத்துக் காய்க்கும்? அது தரையிலிருந்து பெறுவதைத்தானே திரும்பக் கொடுக்கமுடியும்? இப்படியாக, சனங்களுக்குத் தங்களால் செய்துகொள்ளக் கூடியதெல்லாம் செய்து தீர வேண்டு மென்றிருக்கும் அரசாங்கம் அப்படிச் செய்ய முடியாதிருப்பது சனங்களின் கொடிய வறுமையைப் பொறுத்ததாகவும் சனங்களின் கொடிய வறுமை அரசாங்கத்தின் சத்தியின்மையைப் பொறுத்ததாகவுமே இருந்துவருகிறது. (உயர்தர அதிகாரிகளின் சம்பளத்தையும் கட்டடங்களையும் பார்த்தால், அரசாங்கம் தன்னை எளியவர்களின் அரசாங்கம் என நினைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. ப—ர்.) இவற்றை மாற்ற வேண்டாமா? ஆம், கட்டாயம் மாற்றியாக வேண்டும். மாறுதல் அடிப்படையிலிருந்து வரவேண்டும். மாறுதல் நீடித்திருக்க வேண்டுமென்றல், அதனை அடியிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

எழுத்தறிவின்றி ஏழைகளாகப் பிணியாளர்களாக இருக்கும் வங்காளக் கிராம வாசிகளே! உங்களுடைய கடமையை உணரும் படியாக, உங்கள் வேட்டிகளை இடுப்பில் இறுகக் கட்டி உங்களுடைய கடமையை நன்ருகச் செய்யும் படியாக உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தனிப்பட, கையால் ஒன்றும் ஆகாதவர்கள் கூடப் பலர் ஒன்று சேரும் பொழுது பலமடைகிறர்களென்பதை மட்டும் நீங்கள் உணருவீர்களென்றல், ஏராளமான சாதனங்களும் திறமைகளும் இன்னும் உங்களிடம் இருக்கின்றன; அதனை நினையுங்கள், செய்யுங்கள், அப்படிச் செய்தால், சந்தேகமில்லாமல் சீக்கிரம் ஒரு பெரிய செழித்த நாட்டாராய் விடுவீர்கள்; உங்கள் ஒவ்வொருவருக்கும், உங்கள் எல்லாருக்கும் இங்கே ஒரு பெரிய சந்தர்ப்ப மிருக்கிறது. அதனைத் திடமாகப் பிடியுங்கள். நம்பிக்கையின் புதிய ஒளிக் கதிரைப் பாருங்கள். உங்கள் காலிலேயே நிற்க உங்கள் மனதைத் திடப்படுத்துங்கள். ஒற்றுமையாக எல்லாரும் ஒன்று சேருங்கள். மற்றவர்கள் வருவதற்காகவும், நீங்கள் காத்துக்

கொண்டிராமல், நன்றாக வாழ்வதற்கான போராட்டத்தில் அதிகப் பங்கிற்காக ஆசைப் படவும் அதிகமாக முயற்சிக்கவும் தியாகம் செய்து ஒருவருக் கொருவர் உதவவும் பொதுக் காரியத்துக்காக உங்கள் நேரத்தை யும் பணத்தையும் உழைப்பையும் கருதாமல் சுயநலமற்ற ஊழியம் செய்து சிறிய நாட் டாரையும் பெரிய நாட்டாராக்கும் அந்தச் சத் தியையும் வளருங்கள். எதிர்காலம் உங் களையே பொறுத்ததாக இருக்கிறது. வங் காளத்தின் அருமையான பெயருக்குப் பங்கம் வாராதபடி விழித்தெழுங்கள்! விழித் தெழுங்கள்!!

ஆனால், இப்பொழுது தற்காலிகமாக விழித் தெழுந்து, திரும்பவும் தூங்கிப்போய்விடக் கூடாது. கீழே காணும் சில வரிகளை மனப் பாடம்பண்ணி உங்களுடைய வீடுகளில் அதனை ஒரு எடுப்பான இடத்தில் எழுதி வைத்து எவ்வளவு அதிகமாக மனதார அத னைத் திரும்பத்திரும்ப ஞாபகப்படுத்தி வரக் கூடுமோ, அவ்வளவும் செய்து வரும்படியாக நான் உங்களைக் கேட்டுக்கொள்ளலாமென்றால், அப்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் இது முதல், எனக்காகமட்டுமல்ல, என்னைப்போன்ற மற்றவர்களுக்கும் தீவிர மாகவும் பக்தி பூர்வமாகவும் இடை விடா தும் நம் நாட்டாரின் குறைகள் நீங்கவும், நம் நாட்டார் விருத்தியாகவும் என்றும் அழியாத அவியாத ஆவேசத்துடனும் என்றும் தளராத உறுதியுடனும், எப்பேர்ப்பட்ட தடைகளையும் மீறி, காரியத்தைச் சாதித்து முடிக்கும் அந்த உரமான விடாமுயற்சியுடன் வேலை செய்வ தாக என்னுடைய மரியாதை சத்தியமாக எனக்கு நானே உண்மையாக உறுதி செய்து கொள்ளுகிறேன்.

உங்களுடைய சங்கடங்களோடு போராட உங்களுக்குக் கடவுள் போதிய தைரியமும் திடமும் கொடுக்குமாறு எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

(மொழிபெயர்ப்பு.)

---

10. கதை: சரித்திரம்

ஆப்பிரிக்க அதிகாரியின் தீர்ப்பு

John Durairaj.

மகா அலெக்சாந்தர் என்ற கிரேக்க அர சன் ஆப்பிரிக்கா தேசத்திற்குப்போயிருந்தான். அங்குள்ள நாகரிகமற்ற சாதியார் எப்படித் தங்கள் அரசாங்கக் காரியங்களை நடத்துகிறார் கள் என்று பார்க்க ஆசைப்பட்டான். ஆகை யால், அவனை ஒரு தலைவனின் வீட்டிற்குக் கொண்டுபோய்விட்டார்கள். கொஞ்ச நேரத் திற்குள், இருவர் உள்ளே வந்தார்கள். அவர் களில் ஒருவன் அதிகாரியை நோக்கி "இதோ என்னுடன் வந்திருக்கிற இம் மனிதனுடைய நிலத்தைச் சில நாட்களுக்கு முன் கிரயம் கொடுத்து வாங்கினேன். நேற்று மாலை அந்த நிலத்தை உழுதுகொண்டிருக்கும் பொழுது ஒரு பெரிய புதையல் எடுத்தேன். நான் நிலத்தை மாத்திரம் வாங்கினேனே ஒழிய அதிலிருக்கும் புதையலையும் சேர்த்து வாங்கவில்லை. ஆகையால், அப் புதையலுக்குச் சொந்தக்காரனாகிய இவனிடம் அதைக்கொடுத் தேன். ஆனால், அதை இவன் வாங்க மாட் டேன் என்று சொல்லுகிறான்" என்று சொன் னான் உடனே அடுத்தவன் "நியாயாதிபதியே! நான் நிலத்தை இந்த மனிதனுக்கு விற்ற பொழுதே அதிலிருக்கின்றனவெல்லாம் அவ னுக்குச் சொந்தமாயின. ஆகையால், புதை யல் அவனுக்கே சேரவேண்டியது. அது என் னுடையதல்ல" என்று சொல்லி முடித்தான்.

அலெக்சாந்தர் இதைக் கேட்டு, அதிகாரி யின் தீர்ப்பு எப்படியிருக்குமோவென்று வெகு ஆத்திரத்துடன்கவனித்துக்கொண்டிருந்தான்.

அதிகாரியும் சற்று நேரம் யோசித்து விட்டு, முதல் மனிதனைப் பார்த்து "உனக்கு ஒரு மகன் இருக்கிறானா?" என்று கேட்டான். அதற்கு அவன் "ஆம், வயது வந்த மகன் ஒருவன் இருக்கிறான்" என்று சொன்னான். பின்பு, அந்த அதிகாரி மற்றவனைப் பார்த்து,

"உனக்கு ஒரு மகள் உண்டா?" என்று கேட்டான். அதற்கு அவன் "ஆம்" என்று பதிலளித்தான். "அப்படியானால் அவளை இவனுடைய மகனுக்கு விவாகம் செய்வித்து இப்புதையலையும் அவளுக்குச் சீதனமாகக் கொடுத்துவிடு" என்று அந்த அதிகாரி தீர்ப்புச் சொன்னான். இதைக் கேட்ட இருவரும் வெகு சந்தோசமாகத் திரும்பிப் போனார்கள்.

இதைக் கவனித்து வந்த கிரேக்க அரசனுக்கு வியப்பு உண்டாயிற்று. ஆப்பிரிக்க அதிகாரி அவனைப் பார்த்து, "உங்கள் தேசத்தில் இப்படிப்பட்ட வழக்கை எப்படித் தீர்ப்பீர்கள்?" என்று கேட்டான், "இது ஒரு சிக்கலான வழக்கல்லவே. அரசாங்கத்தார் அப்புதையல் முழுவதையும் பறிமுதல் செய்து கொண்டு இருவரையும் உடனே சிறைச்சாலையில் அடைத்து விடுவார்கள்" என்று சர்வசாதாரணமாகக் கூறினான்.

இதைக் கேட்டவுடன் ஆப்பிரிக்கத் தலைவனுக்குப் பொறுக்க முடியாத ஆச்சரியம் உண்டாயிற்று. "என்ன! இப்படிப்பட்ட நியாயம் நடக்கும் தேசத்தில் மழை பெய்கிறதுண்டா?" என்று கேட்டான். அதற்கு அலெக்சாந்தர் கெம்பீரமாக "ஏன்? நன்றாய் மழை பெய்கிறது" என்று சொன்னான். அப்பொழுது தலைவன், "அங்கே புல் பூண்டு, தழை முதலியவற்றைத் தின்று வாழும் விலங்குகளுண்டா?" என்று கேட்டான். "அப்படிப்பட்ட விலங்குகள் அநேகமாயிரம் எங்கள் தேசத்திலுண்டு" என்றான்.

உடனே அந்தத் தலைவன், "சரி, இப்பொழுது எனக்கு விளங்குகிறது, அவ் விலங்குகளின் நிமித்தமாகவே, கடவுள் உங்கள் தேசத்தில் மழையைப் பெய்யச் செய்கிறார்" என்று சொன்னான்.

அலெக்சாந்தர், வெட்கத்தால், தலை குனிந்து நின்றான். வித்தியாதனம்.

---

11. செய்தித் திரட்டு :

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்

1. சாகுபடிக்காக அரசாங்கம் காட்டிவரும் சலுகைகள். சிலபயிர்களுக்குத் தண்ணீர்த் தீர்வையில்லை.

உரத்துக்காகவும் மாட்டுத் தீவனத்துக்காகவும் சணல், அவுரி, பாசிப்பயறு, தக்கைப் பூண்டு, கொழிஞ்சி முதலியன விளைவிப்பதின் அனுகூலங்களைப்பற்றி அடிக்கடி கிராமவாசியின் பஞ்சாங்கங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

பசுந்தாள் பயிர்களை நன்செய்யிலே விளைவித்து அதே நிலத்தில் மடித்து உழவோ அல்லது அறுத்து வேறு நிலத்துக்குப் போடவோ செய்வது வழக்கம். இவற்றுள் முன் கூறியது, அதாவது, அதே இடத்தில் உண்டாக்கி மடித்து உழுவதே சிலாக்கியம். சில இடங்களில் இப்பயிர்களைப் புன்செய்யில் விதைத்து நன்செய்களுக்குக் கொண்டுவரப்படுகிறது. விதைப்புக் காலத்திலும் பிந்தின காலத்திலும் கொஞ்சம் ஈரப்பதம் வேண்டும். ஆகவே நிலத்தில் பதம் இருக்கும்போதே விதைக்க வேண்டும். அதாவது, ஒரு போக நன்செய்யில் அறுவடைக்குக் கொஞ்சம் முன்னே அல்லது அறுவடையானவுடனே விதைக்கவேண்டும்; அல்லது நெல் நடவின்போதும் விதைக்கலாம். பிறகு கொஞ்ச காலத்துக்குத் தண்ணீரும் பாய்ச்சவேண்டும்.

முந்தியிருந்த விதிப்படி, இப்படிப்போடும் தழை உரப்பயிருக்குத் தண்ணீர்த்தீர்வை விதிக்கப்பட்டிருந்தது. சமுசாரிகள் இம்முறையினின்றும் அடையும் பெரிய நன்மையை உத்தேசித்து அரசாங்கம் நல்லெண்ணத்துடன், சமுசாரிகள் தங்கள் சொந்தத்திற்கென்றாவது அல்லது விற்பனைக்கென்றாவது நன்செய்களிலாவது இறைவைப் புன்செய்களிலாவது பசுந்தாள் உரப்பயிர்களைச் செய்தால், மறு உத்தரவு பிறப்பிக்கிறவரைக்கும் கீழ்க்கண்ட அனுகூலங்களை அனுமதி செய்திருக்கிறார்கள்.

மற்றப் பயிர்களுடன் சேர்த்துப் பயிரிட்டால் அவற்றிற்குத் தண்ணீர்த் தீர்வை வசா உண்டு.

எந்தப் பூமியிலானாலும் சரியே, ஒரு வருடத்தில் வேறு பயிர் யாதுமில்லாமல் பசுந்தாள்

பயிர்மட்டும் பயிர் செய்யப்பட்டால் அதற்கு ஏற்படும் தீர்வை விகிதம் பின் வருமாறு :—

புன்செய்ப் பூமியானால் தீர்வை வசா செய்யப்படுவதில்லை; ஆனால், தண்ணீர்த் தீர்வை கிடையாது.

ஒரு போக நன்செய்யானால், வேறே பயிர் பின்னால் செய்யச் சௌகரியம் இருந்தாலும் இல்லாமற் போனாலும், இப்பயிர் செய்வதற்குத் தீர்வை வசூலிப்பதில்லை.

இரு போக நன்செய் நிலங்களில், ஒரு போகத்திற்கு மட்டும் போதுமானதா யிருந்தால், இந்தப் பசுந்தாளுரப்பயிர் செய்யப்பட்ட பொழுது முழு இருபோகச் சர்க்கார் தீர்வையும் வசா செய்யப்படும். இரண்டு போகப் பயிர்களுக்கும் போதுமான தண்ணீர் இருந்த போது, பசுந்தாள் உரப்பயிர் ஒரு போகத்தில் செய்யப்பட்டால், ஒரு போக நன்செய்த்தீர்வை மட்டும் வசூலிக்கப்பட்டு, மற்றப் போகத் தீர்வை வசா செய்யப்படும்.

கம்பவுண்ட் இருபோக நன்செய்கள் சாதாரண இருபோக நன்செய்கள்போலவே கருதப்படும். மேற்சொல்லப்பட்ட 2, 3, 4 பாராக்களில் கண்ட வசாக்கள், பசுந்தாள் உரப்பயிர் செய்யப்பட்ட பரப்பின்மேல் மட்டும் அமுலுக்கு வரும்.

ஒரு வருடக் கெடுவு கொடுத்துப் பொதுவாக எல்லா இடங்களிலும் மேற்சொன்ன வசா விதிகளை நிறுத்த அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு.

நிலச் சுவானுடைய சொந்த உபயோகத்திற்காக மட்டும் நன்செய்யிலாவது இறைவைப் புன்செய்யிலாவது அறுவடைக்குப் பின் உடனேயாவது, மாட்டுத் தீவனத்துக்கென்று விளைவிக்கப்பட்ட பயிர்களை அவை மணிகள் பிடிக்குமுன் பூமியில் மடக்கி உழப்பட்டாலும் அறுக்கப்பட்டாலும் அல்லது மேய்க்கப்பட்டாலும், அப்பயிர்களுக்குத் தண்ணீர்த்தீர்வை இல்லை. புன்செய்ப் பூமிகளுக்கு ஒழுங்கினமாய் நீர் பாய்ச்சப்பட்டாலும் ஒரு போக நன்செய்ப் பூமிகளில் பயிர் செய்விக்க முடியுமான இரண்டாம்போக நன்செய்த் தீர்வைக்குக் குந்தகம் ஏற்பட்டாலும் மேற்சொன்ன சௌகரியத்தை அரசாங்கம் இரத்துச் செய்யக்கூடும்.

புன்செய்யில் செய்யப்படும் அடைசோளப் பயிருக்கும் நன்செய்யில் இரண்டாம் போகச் சாகுபடியாகச் செய்யப்படும் அடைசோளப் பயிருக்கும் பாய்ச்சும் தண்ணீருக்கும் யாதொரு விதமான நிபந்தனையும் விதிக்கப்படுவதில்லை; என்றாலும், விட்டு விட்டு ஒழுங்கின்றி இறைவை செய்யக் கூடாது. நன்செய்ப் பூமியானாலும் அல்லது அந்தப் பசலியில் தண்ணீர் குறைத்துக் கொள்ளக்கூடிய பாத்தியதையளிக்கப்பட்ட புன்செய்யானாலும் தண்ணீருக்கென யாதொரு மனுவும் செய்து கொள்ள வேண்டியதில்லை. தண்ணீர்ப் பாய்ச்சுதல் முறைப்பில்லாமல் நடந்தால், அடை சோளப் பயிர் புன்செய்யிலானாலும் இருபோக நன் செய்யில் இரண்டாம் போகப் பயிரானாலும் தண்ணீர்த் தீர்வையாவது, இரண்டாம் போகத் தீர்வையாவது விதிக்கப்பட மாட்டாது. மேலே சொன்ன அடை சோளத்துக்குரிய வசா விதிகள் கீழ்க்கண்ட மற்றத் தீவனப்பயிர்களுக்கும் 1350, 1351, 1352-ம் பசலிகளில் நீடிக்கப்பட்டிருக்கிறது:—

1. நரிப்பயிறு, 2. மக்காச் சோளம், 3. நேப்பியர்புல், 4. உலூசர்ன் அல்லது குதிரை மசால், 5. யானைப்புல், 6. சணல், 7. கினியாப்புல்.

(சென்னை விவசாய இலாகா.)
Leaflet No. 8.

2. தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி சில்லாக்களில் காவிரி மேட்டூர்ப் பாசனத்தில் உணவுப் பொருள் விளைவை அதிகப்படுத்துவதற்கான சௌகரியங்கள்.

1. சேர்ந்திரளை வட்டாரங்களி லில்லாத நிலங்களில் ஐந்து சதம் தொழிலிலாகாவின் உதவிக்குரிய வகுப்பினர்களுக்கென ஒதுக்கி வைக்கப்படும். இவர்களில் யாரும் அந்த நிலங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளா திருந்தால், அந்த நிலங்களைக் கீழே நாலாவது பாராவில் கண்ட நிபந்தனைகளின்படி அந்த வகுப்பினர்களுக்குத் தற்காலிக சாகுபடிக்குத் தரப்படும்.

2. சேர்ந்திரளை வட்டாரங்களைச் சேராத மற்ற நிலங்களை அவை பெறுமான கிரயத்திற்கு விற்கப்படும் அல்லது சாரி செய்யப்படும். வாங்குவதற்கு எவரும் பிரியப் படவில்லை யென்றாலும் சரியான தொகை

கிடைப்பதற்கில்லை யென்றாலும் கீழே நாலாவது பாராவில் கண்ட நிபந்தனைகளின்படி தற்காலிக சாகுபடிக்கு அவை தரப்படும்.

3. சேர்ந்திரணை வட்டாரங்களிலுள்ள (Compact blocks) நிலங்கள் சாரி செய்யப் படக்கூடியதில்லை யென்றாலும், தற்காலிக சாகுபடிக்குத் தரப்படலாம்.

4. தற்காலிக சாகுபடிக்குக் கொடுக்கப்படும் நிலங்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கும் தடைகளுக்கும் உட்பட்டுக் கொடுக்கப்படும்.

அ. நன்செய் சாகுபடிக்கு இலாயக்கான நிலங்கள் நெல்சாகுபடிக்காகக்கொடுக்கப்படும்.

ஆ. நிலமில்லாத ஏழைகளுக்கே முதலாவதாகக் கொடுக்கப்படும்.

இ. நிலங்களைப் பெறுபவர் நிலத்தைத் திருத்த விருத்தி செய்யத் தான் செலவழித்திருக்கும் தொகையைக் கேட்கக்கூடியதில்லை. தான் சாகுபடி செய்துவரும் காரணத்தை யிட்டு அந்த நிலத்தைச் சாரி பெறுவதற்குத் தனக்குச் சிறந்த பாத்தியதை உண்டென்று கொண்டாடக்கூடியதில்லை.

ஈ. நெல் சாகுபடிக்காகத் தற்காலிகமாகக் கொடுக்கப்படுவன ஐந்தாண்டுகளுக்குக் கொடுக்கப்படும்.

உ. நன்செய் சாகுபடிக்கு இலாயக்கில்லாத நிலங்கள் தீவனப்பயிர் சாகுபடி செய்ய ஒவ்வொரு வருடமும் தற்காலிகமாகக் கொடுத்து வரப்படும்.

The Madras Govt. Press Note No. 19.

3. நெல் முதலிய தானிய விளைவை அதிகப்படுத்துவதற்காக நாளது 1351ம் பசலி முதல் மூன்று பசலிகளுக்குக் கீழே கண்ட சௌகரியங்கள் செய்துவர அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

அ. 1349-50ம் பசலிகளில் சாகுபடி செய்யப்பட்டிராத தீர்வை ஏற்பட்டிருக்கும் தரிசு நிலங்களிலும் காடாக இருந்து அதினின்றும் விலக்கப்பட்ட நிலங்களிலும் 1351, 1352, 1353-ம் பசலிகளில் நெல் முதலிய உணவுத் தானியங்கள் தீர்வையில்லாமல் சாகுபடி செய்து கொள்ளலாம். ஆனால், இப்போதைய விதிகளின்படி தண்ணீர் பாய்ச்சிக் கொள்ள அனுமதி பெறவேண்டியவற்றிற்கு அப்படிப் பாய்ச்சிக்கொள்ள முன்னக் கூடியே அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

திரிசிராப்பள்ளி சில்லா காவிரிப் பாசனப் பிரதேசத்துக்கும் தஞ்சாவூர் சில்லா காவிரி மேட்டுப் பாசனப் பிரதேசத்துக்கும் இந்தச் சலுகைகள் கிடையா. இவற்றிற்கு 21-1-42ல் பிறந்திருக்கும் 19ம் நம்பர் பத்திரிகைக் குறிப்பில் கண்ட சலுகைகள் மட்டுமே கிடைக்கக் கூடும்.

ஆ. வீட்டுக் கொல்லைகளில் 1351, 1352, 1353ம் பசலிகளில் 25 செண்டுகள் வரை புன்செய் உணவுத் தானியங்கள் தீர்வையில்லாமல் சாகுபடி செய்துகொள்ளலாம்.

இ. நன்செய் நிலங்களில் புன்செய் உணவுத் தானியங்கள் சாகுபடி செய்வதற்குப் போதுமான தண்ணீரில்லா திருக்குமானால் சாகுபடி செய்வதற்கு வேண்டிய உதவியும் ஆதரவும் சமுசாரிகளுக்குக் காட்டப்படும்.

The Madras Govt. Press Note No. 27.

4. சென்னை விவசாய இலாகா தங்கள் திண்டிவனம் ஆராய்ச்சி நிலயத்தில் ஒரு புதுத் தினுசு நிலக்கடலை யுண்டுபண்ணியிருக்கிறது. இது அதிக விளைவைத் தருகிறது. அரியலூரில் இதனை விதைத்துப் பார்த்ததில், பழைய விதை ஏக்கருக்கு 1200 இராத்தல் விளைய இதனால் 1600 இராத்தல் விளைந்திருக்கிறது; தண்ணீர்த் தட்டேற்பட்டாலும் அதனைத் தாங்கிக் கொள்ளுகிறது; பழைய செடி போல் காய்ந்து போவதில்லை. இதன் விளைவும் திருப்திகரமாக இருக்கிறது.

The Madras Director of Agriculture Press Note.

5. சில ஆண்டுகளுக்குமுன், திருத்திய விதைக் கூழ்வரகு (கேழ்வரகு) E. C. 593 சமுசாரிகளுக்குச் சாகுபடிக்காகக் கொடுக்கப்பட்டது. அது முன்னிலும் பத்து முதல் பதினைந்து சதம் அதிக விளைவைத் தருகிறது. என்றாலும், விளைவதற்கு நாள் அதிகம் பிடிப்பதால், கிணற்றில் தண்ணீர் வெகு ஆழத்திலிருக்குமிடங்களில் அதனை விரும்புகிறார்களில்லை. இந்தக் குறைவை நீக்குவதற்காக E. C. 3517 என்றொரு புதுத் தினுசு உண்டு பண்ணப்பட்டிருக்கிறது. அது பத்து நாட்களுக்கு முன்னதாகவே விளைவுக்கு வந்து விடுகிறது. E. C. 593 க் காட்டிலும் அதிகமாக விளையா விட்டாலும் அந்த அளவுக்குக்

குறைவதில்லை. கோயம்புத்தூர் சில்லாவில் அது பரவி வருகிறது; மற்றும் சில்லாக்களிலும் அதனைப் பரப்புவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

The Madras Director of Agriculture Press Note.

6. சமீபத்தில் வெளியாகியிருக்கும் தனி யாணை (Ordinance) யின்படி சேருவதும் சேரக்கூடியதுமான பருத்தி நிதியிலிருந்து சமுசாரிகளுக்கு வேண்டும் உதவி செய்ய நம் இந்திய அரசாங்கம் விரும்புகிறது. ஆகையால், சமுசாரிகள் தங்கள் பருத்தியை அவசரப்பட்டுக் குறைந்த விலைக்கு இறக்கடியில் விற்க வேண்டியதில்லை.

அரசாங்கம் அப்படிச் சமுசாரிகளுக்குதவுகிறதற்கான திட்டமொன்றைச் சீக்கிரம் செய்வதற்காக இந்திய மத்திய பருத்திக் கழகம் கிழக்கிந்தியப் பருத்திச் சங்கம் இவற்றின் பிரதிநிதிகளை நாளிது பிப்பிரவரி மாதம் 16ம் தேதி திங்கட்கிழமையன்று தில்லி (Delhi) யில் தங்களைச் சந்திக்கும்படி அழைத்திருக்கிறது.

The Govt. of India Communique.

7. தண்ணீர்த் தட்டினால் விளையாமல் போனதும், நாலணு மதிப்புக்குக் குறைவான மாசூல் கிடைக்கக்கூடும் என்று கருதப் படுவதுமான நன்செய் நிலங்களின் தீர்வையைப் புதுக் கோட்டை தர்பார் பூராவாக வசா செய்திருக்கிறது.

சுதேச மித்திரன்.

8. புது அரையணு: சிறிய நாணயங்கள் தேவை அதிகரித்து விட்டதாலும், நாணயங்கள் வெளியீடு இரட்டிப்புக்கு மேல் ஆகிவிட்டதாலும், உலோகத்தில் மிச்சம் பிடிப்பதற்காகச் சிறிய அரையணு நாணயம் அடிக்கப்படும். புதிய நாணயம், சதுரமாக வளைவான ஓரத்துடன் ஒரு அணு எடையில் முக்கால் இருக்கும். நிக்கல் உலோகத்தில் மிச்சம் பிடிப்பதற்காகப் புதிய ஒரு அணு, புதிய அரையணு ஆகிய இரண்டும் நிக்கல் பித்தளைக் கலப்பில் செய்யப்படும்.

The Govt. of India Communique.

ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள்

1. சில தினங்களுக்கு முன்பு பெங்களூரில் நடைபெற்ற கண்காட்சிக்கு நம் மிந்தியாவின் பல பாகங்களிலிருந்து பசுக்களும் எருதுகளும் கொண்டுவரப்பட்டன. ஆலம்பாடிக் காளைகள் அதிகமாக வரவில்லை. "குறைந்த ஆகாரத்துடன் அதிக வலிமையுடையனவாக இருப்பதால், இந்தக் காளைகளை எளிதில் விருத்தி செய்யலாம்'' என்று கலைமகள் கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. திரு வெள்ளிங்கிரிக் கவுண்டர், பழைய கோட்டை பட்டக்காரர்; ஈசுவரமூர்த்திக் கவுண்டர் ஆகிய பெரியோர்கள் இந்தக் காட்சியில் கலந்து கொண்டதாகவும், காங்கேயம் இனத்துக்கு ஆறு பரிசுகள் கிடைத்ததாகவும் தெரிகிறது.

கூட்டுறவு.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. வித்தியாச மேன்?— சமீபகாலத்தில் நடந்து வரும் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர் சங்கக் கூட்டத்திலும், சாமான்களின் விலை ஏற்றம் அதிகமாகிக் கொண்டே வருவதால், ஆரம்ப ஆசிரியர்களுக்கு இதனை முன்னிட்டுச் சண்டைப்படி (Dearness allowance) கொடுக்குமாறு கோட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் செய்யப்படுகின்றன. விலை ஏறி இருக்கின்றன என்பது உண்மையே. அதனால் குறைந்த சம்பளம் பெறுவோருக்கு உதவியும் தேவை என்பதும் எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடியது தான். ஆயினும் சில தாபனங்களில் ஆசிரியர்கள் தவிர மற்ற எல்லாச் சிப்பந்திகளுக்கும் உதவி செய்து வருகிறார்களாம். ஆனால், ஆசிரியர்களுக்கு இந்த உபகாரம் இல்லை என்று சொல்லப்படுகிறதாம். ஏன் இந்த வித்தியாசம்? சம்பளத்தைக் கவனித்துப் பார்த்தால், மற்ற இலாகாவில் இருப்பவர்களைக் காட்டிலும் ஆசிரியர்களின் சம்பளமே குறைவு. ஆசிரியர்கள் என்றால் கடைகளில் ஏதாவது சலுகை காட்டுகிறார்களா? மற்ற இலாகாவிலுள்ளவர்களுக்குச் சாமான்கள் கடனுக்குக்

கூடக் கிடைக்கும். ஆசிரியர்களுக்கு முன் பணம் கொடுத்தால் தான் சாமான்கள் விற்கப் படுகின்றன. இப்படியிருக்க, ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகம். அதனால் நபர் 1-க்கு ஒரு ரூபா கொடுத்தால் மாதம் ரூ. 1000-க்கு மேல் வேண்டியிருக்குமே என்று கணக்கிட்டு, இவர்களுக்கு உதவி செய்வதில்லை யென்று சொல்லுவது அநீதியாகும். இம்மாதிரி வித்தியாசம் பாராட்டாமல், ஆசிரியர்களுக்கும் உதவவேண்டும் என்பதை வற்புறுத்துகிறோம்.

பாலர் கல்வி.

2. அரிசனப் பிள்ளைகள் படிக்காத பள்ளிக்கூடங்கள் அவர்கள் படிப்பதற்கு வசதியளிப்பதில்லை யென்று கருதப் படுமென்றும் அப்படிப் பள்ளிக்கூடங்களின் அங்கீகாரத்தை இரத்துச்செய்யப் படுமென்றும் ஒரு விதி பம்பாய் மாகாணத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதன்படி சில பள்ளிக்கூடங்களின் அங்கீகாரமும் சமீபத்தில் இரத்துச் செய்யப்பட்டது. அந்த விதி சட்டப்படி செல்லக் கூடியதில்லை யென்று விவகாரம் செய்ததில், அது சட்டப்படி செல்லக் கூடியதென்றே தீர்ப்பாகி விட்டது.

The Social Welfare.

ஈ. கூட்டச் செய்திகள் : தீர்ப்புக்கள்

சென்ற சனவரி மாதம் பம்பாயில் கூடிய இந்திய (The Indian Central Cotton Committee) மத்திய பருத்திக் கழகம், பருத்தி பயிரிடும் பரப்பை நம் நாட்டில் சுதேச பாகங்கள் உள்பட 50 சதமாகக் குறைக்கும் படியும், மீதிப் பூமியில் உணவுத் தானியங்களை விதைக்கும்படியும், அடுத்த மார்ச்சு மாதம் 1-ம் தேதிக்குள் மத்திய அரசாங்கம் சட்டம் செய்து விடவேண்டுமென்று தீர்மானித்து, அதற்காகச் செல்வாக்குள்ள சில கனவான்களைக் கொண்ட ஒரு கழகத்தை நியமித்து மேன்மைதங்கிய அரசப்பிரதிநிதி அவர்களிடம் ஒரு தூது போகவும் ஏற்பாடு செய்திருக்கிறது.

கூட்டுறவு.

12. அறிவுரைத் திரட்டு.

அ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

I. கெட்ட மனப்பழக்கங்கள் பண்ணுகிற கேடுதி (சென்ற இதழ் தொடர்ச்சி)

கடவுள் நமக்கு ஒரு குறித்த அளவு தான் நரம்புச் சத்தி கொடுத்திருக்கிறார். நாம் விடாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் அல்லது பயப்பட்டுக் கொண்டிருந்தால், இந்தச் சத்தி வீணாகிக்கொண்டிருக்கும். இதனால் நமது தினப்படி வேலைக்கு அஃது உபயோகப் படாமற் போகும்.

கிரைல் என்ற ஒரு நிபுணர் இதனைப்பற்றி அதிக ஆராய்ச்சி பண்ணி, சிராக்கவலை, பீதி (கோபம் ப-ர்.) முதலியன நமக்கு மிகுந்த கேடு செய்கின்றன என்று கண்டு பிடித்திருக்கிறார். நம்முடைய மூளையில் தானியம் மாதிரி ஒரு வகையான பொருள்கள் இருக்கின்றன. இவற்றிற்கு அங்கிலத்திலே நெசுல்சு கிராணூல் (Nessl's Granules) என்று பெயர். இவற்றிலிருந்து தான் பின்னால் நரம்புச் சத்தி உண்டாகும். சிராக்கவலை இந்தப் பொருள்களை அழித்துவிடும். மூளையிலே மாத்திரமா இப்படிச் செய்கிறது என்றால், இல்லை. கல்லீரல் புரிசை அட்ரெனல் சுரப்பிகள் ஆகிய அவயவங்களிலும் இதே வேலைதான். பயம் கவலை கோபம் ஆகிய இப்பலத்த உணர்ச்சிகள் இவ்வாறு நரம்புச் சத்தியை அழிக்கின்றன என்பதற்குச் சந்தேகமே இல்லை.

இவை செய்கிற கேடு, இவை இருக்கிற கால அளவையும் உக்கிரத்தையும் பொறுத்தது. நரம்புச் சத்தி இப்படி வீணாய்ப் போய் விடுவதால் தான், பொதுவாகப் பதற்றமுள்ளவர்கள் பலக் குறைவாகவும் சோர்வாகவும் இருக்கிறார்கள். ஆனால், சத்தியைச் சரியான துறைகளில் செலுத்தினால், அது நமக்கு நாள் முழுவதற்கும் போதுமானதாக இருக்கும்;

தவிர, அவசர காலங்களில் உதவும் படிக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேமித்து வைத்துக் கொண்டுவரவும் இயலும்.

நம்முடைய கெட்ட மனப் பழக்கங்களை மாற்றியாக வேண்டும். மனதிலே எந்த நேரமும் பயம் கவலை சினம் என்ற பலத்த உணர்ச்சிகள் இருக்கப்படா. நம்முடைய உணர்ச்சிகள் மனப்பான்மைகள் நினைப்புகள் முதலில் மாறவேண்டும். பயத்திற்கும் கவலைக்கும் பதிலாகத் தைரியமும் நம்பிக்கையும், சந்தேகத்துக்குப் பதிலாக விசுவாசமும், கூச்சத்திற்குப் பதிலாகப் பிறரிடத்திலே தாராளமாகப் பழகுகிற சுபாவமும், எரிச்சலுக்குப் பதிலாகச் சாந்தமும் ஏற்படவேண்டும். இது ஒரு நாள் இரண்டு நாளிலே ஏற்பட்டு விடுகிற ஒரு காரியமல்ல. நாட் செல்லும். விடா முயற்சியாய்ப் பிரயாசைப்பட்டால் முடியும்.

உலகத்திலே எந்த ஒரு பெரிய காரியத்தையும் செய்வதற்குக் காலமும் முயற்சியும் வேண்டும். நம்முடைய கெட்ட மனப் பழக்கங்கள் ஒரு நாளிலே உண்டானவையல்ல. ஆகையால் அவற்றை ஒழிப்பதற்கும் நாட் செல்லும். "பழக்கம்" ஒரு காரியத்தைத் திரும்பத் திரும்பச் செய்வதாலே ஏற்படுவது. அதுஏற்பட்ட பிறகு,நாம் அந்தக் காரியத்தைச் செய்வதற்கு யோசிக்கக்கூட வேண்டியதில்லை. நம்மையும் அறியாமலே அதனைச் செய்வோம். பழக்கம் என்றால் அதுதான். ஆகையால், அதனை மாற்றுவது இலேசான காரியமல்ல; எடுத்த எடுப்பிலே ஆகக்கூடியதில்லை; பொறுமையோடு பிரயாசைப்பட்டால்தான் முடியும். உரோமாபுரி ஒரு நாள் வேலையல்ல என்று ஆங்கிலத்திலே சொல்லுவார்கள். அது சரிதான். இந்த ஆண்டின் முடிவுக்குள்ளாக நம்முடைய கெட்ட பழக்கங்கள் மனப்பான்மைகள் நினைப்புகள் எல்லாவற்றையும் மாற்றிவிடுவதென்று தீர்மானம் பண்ணி, அதற்குப் பிரயாசைப் படுவோமாக.

இதற்குப் பொறுமை மிகவும் அவசியம். கொல்லையிலே ஒரு மரம் வைத்து வளர்க்க வேண்டுமென்றால், நாம் அதற்கு ஆத்திரப்பட மாட்டோம். அது மெதுவாகத்தான் வளரும் என்று நமக்குத் தெரியும். ஆனால், நமது தேகாரோக்கியம் பற்றி நமக்கு ஏன் இந்தப் புத்தியில்லாமற் போகிறது? மருந்து சாப்பிட்டவுடனே வியாதி சுகமாகாவிட்டால், வருத்தப்படுகிறோம்; பண்டிதர் மேல் கூடக் கோபம் கோபமாக வருகிறது. வியாதி எப்படி உண்டானதென்பதை மறந்து விடுகிறோம். மாதக்கணக்காக, வருடக்கணக்காக ஆரோக்கிய பிரமாணங்களை மீறினதின் பயனாக ஏற்பட்டதென்பதை மறந்து விடுகிறோம். அப்படி ஏற்பட்ட வியாதியை இரண்டொரு நாளில் சுகப்படுத்தி விடலாமென்று எதிர்பார்ப்பது எவ்வளவு பேதைத்தனம்! அனேகருக்கு வியாதிக்கு மருந்து சாப்பிடவேண்டுமென்பது மட்டுந்தான் தெரிந்திருக்கிறது. வியாதி வந்த காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைப் பரிகரித்துக்கொள்ள வேண்டும் என்ற யோசனை அவர்களுக்கு வருவதில்லை. அந்தக் காரணங்கள் தப்பிதமான உணவு குடிப்பழக்கங்களாக, தொழிற் பழக்கங்களாக, மனப்பழக்கங்களாக இருக்கலாம். அவற்றை நீக்காமல் வைத்துக் கொண்டே வியாதியை மட்டும் சுகமாக்கிவிடத் தேடுகிறார்கள். இது ஆகிற காரியமா?

நல்வழி.

II. அன்பு ஒருவனை நல்ல செய்கைகளைச் செய்யும்படி ஏவும்; அன்பு பாவங்களைச் செய்ய விடாமல் தடுக்கும். அன்புள்ளவன் உயிர்களை வருத்திக் கொல்ல மாட்டான். அன்புள்ளவன் பிறருடைய செல்வத்தைக் கண்டு பொறாமைகொள்ள மாட்டான். அன்புள்ளவன் பிறர் குற்றங்களைத் தூற்றித் திரியமாட்டான். அன்புள்ளவன் பொய்யினாலோ களவினாலோ வேறெந்தத் தீச்செய்கையினாலோ பிறர் மனதை வருத்தமாட்டான். எந்தக் காரியஞ் செய்வதற்கும் அன்பு வேண்டும். அன்பில்லாமற் செய்யும் காரியங்களாற் பலனில்லை. அன்பில்லாமற் கொடுக்கப்பட்ட மிக உருசியான சாப்பாட்டிலும் பார்க்க, அன்புடன் கொடுக்கப்படும் பழைய சாதத் தண்ணீர் மேலானதாகும்.

(சைவபோதம்.) சிவபாதசுந்தரம்.

III. 1. சொல்லிச் செய்வார் நல்லோர்; சொல்லாமற் செய்வார் பெரியோர்;
சொல்லியும் செய்யார் கசடர்.
2. செருப்பின் அருமை வெய்யிலில் தெரியும்;
நெருப்பின் அருமை குளிரில் தெரியும்.

1942-ஆம் வருஷம்—மார்ச்சு மீ

விசு ஆண்டு மாசி-பங்குனி மீ கொல்லம் 1117-ஆம் வருஷம்

திதி, நட்சத்திரம், தியாச்சியம் முதலியவை.

	இ.		த.	கிழ.	
	1		18	ஞா	திரயோ-2-28, ஆயி-35-22, தியா-6-7.
	2		19	திங்	சதுர்-3-0, மக-36-45, தியா-6-4, ரா-27-13, ○ பௌர்ணமி, மதி மறைவு.
	3		20	செ	பௌ-2-21, பூர-36-58, சேடம்-0-35, ரா-25-2, இந்துவிடுமுறை.
	4		21	புத	பிர-0-31, துதி-56-54, உத்தி-36-0, ரா-27-40.
	5		22	வியா	திரு-53-31, அத்-34-8, சேடம்-1-4, ரா-23-33.
	6		23	வெ	சது-48-45, சித்-31-24, ரா-14-55.
	7	மாசி மீ	24	சனி	பஞ்-43-29, சுவா-28-2, ரா-11-27.
	8		25	ஞா	சட்டி-37-50, விசா-24-16, ரா-3-52.
	9		26	திங்	சப்-31-59, அனு-20-14, ரா-3-31.
	10		27	செ	அட்-26-7, கேட்-16-7, ரா-5-1.
	11		28	புத	நவ-20-26, மூல-12-9, ரா-4-57
	12		29	வியா	தச-15-9, பூரா-8-34, தியா-27-34.
	13		30	வெ	ஏகா-10-25, உத்திரா-5-31, தியா-15-7.
மார்ச்சு மீ	14		1	சனி	துவா-6-23, திருவோ-3-7, தியா-12-50, மீனரவி-2-19, பிரதோடம்.
	15		2	ஞா	திரயோ-3-21, அவிட்-1-26, தியா-19-24.
	16		3	திங்	சதுர்-1-16, சத-1-20, தியா-17-32, ● அமாவாசை.
	17		4	செ	அமா-0-55, பூரட்-2-8, தியா-26-58, தெலுங்குப் புதுவருட விடுமுறை.
	18		5	புத	பிர-0-55, உத்திரட்-4-14, ரா-5-33.
	19		6	வியா	துதி-2-44, ரேவ-7-54, கரிநாள்.
	20		7	வெ	திரு-5-41, அசு-12-2, தியா-1-19, ரா-8-13, சதுர்த்தி.
	21		8	சனி	சது-9-40, பர-27-26, ரா-20-29, ✳ கார்த்திகை.
	22		9	ஞா	பஞ்-14-23, கார்-23-30, சட்டி.
	23		10	திங்	சட்டி-19-28, உரோ-29-53, தியா-7-45, ரா-15-20.
	24		11	செ	சப்-24-33, மிருக-36-13, ரா-18-17.
	25	பங்குனி மீ	12	புத	அட்-29-13, திருவா-42-8, சித்.
	26		13	வியா	நவ-33-11, புனர்-47-18, தியா-14-43, சிராமநவமி விடுமுறை.
	27		14	வெ	தச-36-6, பூச-51-25, தியா-8-40.
	28		15	சனி	ஏகா-37-50, ஆயி-54-23, தியா-24-30, ஏகாதசி கரிநாள்.
	29		16	ஞா	துவா-38-19, மக-56-7, தியா-25-15.
	30		17	திங்	திரயோ-37-31, பூர-56-34, தியா-16-16, பிரதோடம், மீளடி நபி விடுமுறை.
	31		18	செ	சதுர்-35-31, உத்தி-55-54, தியா-14-22.
	1		19	புத	பௌ-32-25, அத்-54-9, தியா-17-16, ○ பௌ, கரிநாள்.
	2		20	வியா	பிர-28-23, சித்-51-35, தியா-13-18, கிறித்தவ விடுமுறை.
	3		21	வெ	துதி-23-37, சுவா-48-21, தியா-4-49, நல்லவெள்ளி விடுமுறை.
ஏப்பிரல் மீ	4		22	சனி	திரு-18-15, விசா-44-36, தியா-1-29, ரா-23-41, ஈஸ்டர் விடுமுறை.
	5		23	ஞா	சது-12-27, அனு-40-33, ரா-23-21.
	6		24	திங்	பஞ்-6-27, கேட்-36-28, ரா-24-52.
	7		25	செ	சட்டி-0-31, சப்-54-17, மூல-32-32, ரா-24-46.
	8		26	புத	அட்-49-23, பூரா-28-51, தியா-17-28.

Regd. No. 4126.

அன்புநிலை

தேடும் பருவமிது கண்டீர்; சேரவாரும், செகத்தீரே.—தாயுமானவர்.

" கிராம தூதன். "

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

கிராம முன்னேற்றமே, தேச முன்னேற்றமாகும். கிராம முன்னேற்றத்திற்கும் நகரவாசிகள் சுக வாழ்விற்கும் அவசியமான விபசாயம், கூட்டுறவு, கைத்தொழில், குடிசைத்தொழில், கல்வி, சுகாதாரம், குடும்ப வாழ்க்கை பற்றிய பல நல்லுரைகளும், கதைகளும், மற்றும் கிராமவாசிகள், விபசாயிகளுக்குப் பிரயோசனமான செய்திகளும், அறிவுரைகளும், பஞ்சாங்கம் முதலியனவும் பிரதி அங்கிலமாதம் முதல் ஐந்து தெய்திக்குள் இந்தப் பத்திரிகையில் வெளிவரும். இதைப் படித்து, இதில் காணும் நலங்களைப் பிறர்க்குச் சொல்லுங்கள். சந்தேகம் தோன்றினால், குறை ஏதும் கண்டால் பத்திராதிபருக் கெழுதுங்கள்.

வி. பி. தபாலினால், சந்தாதாருக்கு அனாவசியமாகத் தபாற்செலவு அதிகமாவதால், இந்தப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை. சந்தா முன் பணமாகச் செலுத்தியிருக்கும் காலம்வரைக்கே பத்திரிகை யனுப்பிவரப்படும்.

பத்திராதிபர்.
இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை,
சீவில்லிபுத்தூர்.

பிரசுரகர்த்தர்.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

உள்நாட்டு வருடச்சந்தா ... ரூ	1—8—0	ஒரு பக்கம் விளம்பரம் ஒரு தடவை	10—0—0
வெளி ,, ... ரூ	2—0—0	அரைப்பக்கம் ,,	6—0—0
தனிப் பிரதி விலை ... ரூ	0—2—0	கால்பக்கம் ,,	3—0—0

1-வது மலர் (1939-ம் வருஷத்திய 12 இதழ்கள்) 2-வது மலர் (1940-ம் வருஷத்திய 12 இதழ்கள்)
3-வது மலர் (1941-வருஷத்திய 12 இதழ்கள்) பைண்டு செய்து சில பிரதிகளேயிருக்கின்றன.
தனித்தனி விலை ரூ. 1—4—0

கால்நடைச் சந்தைகளும் விபசாயக் கண்காட்சிகளும்

(மார்ச்சு-ஏப்ரல் மீ பஞ்சாங்கம் உட்பக்கம் பார்க்க.)

திருசிராப்பள்ளி சில்லா கரூர் தாலுகா உப்பிடமங்கலத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும், பாமதியிலும் முசிரித் தாலுகா தோட்டியத்திலும் செவ்வாய்க்கிழமை தோறும், குளித்தலைத் தாலுகா மணப்பாரையில் புதன்கிழமை தோறும் கால்நடைச் சந்தைகள் நடைபெற்று வருகின்றன. கோயம்புத்தூர் தாலுகா துடியலூரில் திங்கட்கிழமை தோறும், கோபிச்செட்டிபாளையம் தாலுகா புளியம்பட்டியிலும் பொள்ளாச்சியிலும் வியாழக்கிழமை தோறும் கால்நடைச் சந்தைகள் நடைபெற்றுவருகின்றன.

தஞ்சாவூர் சில்லா கும்பகோணம் தாலுகா நீலத்தநல்லூரில் மகம் உற்சவத்தின் பொழுது சுமார் ஒரு மாதம் (பிப்பிரவரி-மார்ச்சு மாதம்) கால் நடைச்சந்தை நடைபெறும். தென் ஆர்க்காடு சில்லா சிஞ்சி தாலுகா மேல மலயனூரில் மார்ச்சு மாதம் இரண்டாம் வாரத்திலும் திண்டிவனம் தாலுகா மயிலத்தில் மார்ச்சு மாதம் மூன்றாம் வாரத்திலும் திருக்கோயிலூர் தாலுகா பாறைக் கலலில் மார்ச்சு மாதம் முதல் மூன்று மாதமும் கால்நடைச் சந்தைகள் கூடும். அப்பொழுது விவசாயக் கண் காட்சியும் நடைபெறும். மதுரை சில்லா நிலக்கோட்டை தாலுகா அத்திக்கோம்பையிலும், நிலக்கோட்டையிலும் மார்ச்சுமாதம் மூன்றாம் வாரத்திலும் மதுரைத் தாலுகா திருப்பாங்குன்றத்தில் மார்ச்சு மாதம் நான்காம் வாரத்திலும் மதுரையில் மார்ச்சு ஏப்பிரல் மாதங்களிலும் கால்நடைச் சந்தைகள் நடைபெறும். திருநெல்வேலி சில்லா கோவில்பட்டி தாலுகா கழுதுமலையில் பங்குனி உத்தரத்தையொட்டி மார்ச்சு ஏப்பிரல் மாதங்களில் ஒரு மாதம் கால் நடைச் சந்தை நடைபெறும்.

Printed at the Excelsior Power Press, North Chitrai St., Madura:-42.